Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 4 புதன்கிழமை (17-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:51

# எழுச்சி நிகழ்வை மாணவர்களே திட்டமிட்டபடி இன்று நடத்துவர்

## நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை ஆயுதங்களின் முன் நிறுத்தாமலிருக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜனவரி 17

**சமாதானம் மற்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினரே திட்டமிட்டபடி இன்று காலை நடத்துவர்.**

**மக்கள் மீது கொண்ட அக்கறை காரணமாகவும், எழுச்சி நிகழ்வின் நீண்டகால பரிமாணங்களைக் கருத்தில் கொண்டும், நிராயுதபாணிகளான தமிழ்ப் பேசும் மக்களை ஆயுதத்தின் முன் நிறுத்த விரும்பாததாலும் இந் நிகழ்வில் மக்கள் பங்களிப்பைத் தவிர்ப்பது என பல்கலைக்கழகச் சமூகம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.**

யாழ்.பல்கலைக்கழகத்தின் பல்வேறு அங்கங்களையும் சார்ந்த பிரதிநிதிகள் நேற்றுக்கூடி ஆராய்ந்த பின்னர் தமது முடிவைத் தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர் சங்கம், ஊழியர் சங்கம், எழுதுநர், தொழில்நுட்ப அதிகாரிகள் சங்கம் ஆகியவற்றின் தலைவர்களும் பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியச் செயலாளரும் இந்த அறிக்கையில் ஒப்பமிட்டிருந்தனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(3 ஆம் பக்கம் பார்க்க)

### 20 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற சண்டையில் மீட்கப்பட்டதாகத் தெரிவித்து 20 சடலங்கள் இன்று அதிகாலை 1 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரியில் படையினரால் ஒப்படைக்கப்பட்டன.

இதில் 18 சடலங்கள் பெண்கள் உடையன எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### மின்னஞ்சலில் 'பொங்கு தமிழ்' தகவல்கள்

யாழ்ப்பாணம்,ஜன.17

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள விரும்பும் அனைவருக்கும் சர்வதேச ரீதியில் இந்நிகழ்வு பற்றிய தகவல்களை அறிவிப்பதற்காக விசேட மின்னஞ்சல் முகவரி ஒன்றை யாழ்.பல்

(12ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கிலிருந்தும் ஆதரவு

மட்டக்களப்பு,ஜன.17

யாழ்.பல்கலைக்கழக சமூகம் இன்று ஏற்பாடு செய்துள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு தமது பூரண ஆதரவைத் தெரிவிப்பதாக கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக சமூகம் அறிவித்துள்ளது.

பல்வேறு அடக்குமுறைகளைக் கையாண்டு இந்த நிகழ்வைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் கூட துணிச்சலுடன் அது முன்னெடுக்கப்படுவதை அறிந்து பெருமைப்படுகிறோம் என்று அந்த சமூகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலையிலும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. (உ-3-6)

### ஆலயப் பூசகர் ஷெல்லுக்குப் பலி

தென்மராட்சி,ஜன.17

மிருசுவில் உசன் பகுதியில் நேற்றுக்காலை வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு இலக்காகி ஆலயப் பூசகர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்; அவரது தாயார் உட்பட இருவர் காயம் அடைந்தனர்.

சாவகச்சேரி சப்பச்சி மாவடியில் இருந்து இடம்பெயர்ந்து உசனில் தங்கியிருந்த சாம்பசிவசர்மா இந்திரசர்மா (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் வேண்டி பகல் 12 மணிக்கு மணிகளை ஒலித்து பிரார்த்தனை செய்க!

### மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மக்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.17

நிரந்தர சமாதானம், போர் நிறுத்தம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை ஆகிய கருத்துக்களை மனதில்கொண்டு, குறிப்பாக இன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கு, அனைத்து மக்களையும் பிரார்த்திக்கும்படியும் -

அவ்வேளை ஆலயப் பொறுப்பாளர்களை ஆலய மணிகளை ஒலிக்கச் செய்யும்படியும் -

47 மனிதநேய அமைப்புக்கள் பகிரங்க அறிக்கை மூலம் கோரியிருக்கின்றன.

இன்று நடைபெறவுள்ள எழுச்சி நிகழ்வு தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு இந்து மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், மனிதநேய அமைப்புக்களின் தலைவர்கள், பொது மக்கள் ஆகியோர் ஆதரவும் ஒத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று காலை 10.30க்கு எழுச்சி நிகழ்வு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தினர் ஏற்பாடு செய்துள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு திட்டமிட்டபடி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுயநிர்ணய உரிமை ஒன்றே தமிழ் மக்களின் அபிலாசை என்பதனை ஒரே குரலில் உலகுக்கு எடுத்தியம்பும் வகையில் யாழ்.பல்கலைக்கழக சமூகமும் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து இந்த எழுச்சி நிகழ்வுக்குத் திட்டமிட்டிருந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவை நோக்கி நேற்று படை நடவடிக்கை ஆரம்பமாம்!

### நேற்று ஓர் அதிகாரி உட்பட 18 படையினர் பலி; 90 பேர் காயம்!

கொழும்பு,ஜன.17

கிளாலி, எழுதுமட்டுவாழ் பகுதிகளிலுள்ள முன்னரங்க நிலைகளிலிருந்து, 'கினிகிர - 9' என்ற பெயரில் ஆனையிறவை நோக்கிய புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நேற்று அதிகாலை 6.30 மணிக்கு படையினர் ஆரம்பித்திருப்பதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று இரவு களமுனையில் இருந்து கிடைத்த தகவல்களின்படி ஓர் அதிகாரி உட்பட 18 படையினர் உயிரிழந்தனர் என்றும் -

நான்கு அதிகாரிகள் உட்பட 90 படையினர் காயமடைந்தனர் என்றும் - இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் 22 சடலங்களைப் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகளின் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களின் மத்தியிலும் படையினர் முன்னேறி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் குவிப்பை படம் பிடிப்பதற்கு 'உதயன்' படப்பிடிப்பாளருக்குத் தடை!

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்ததைப் படமெடுக்கச் சென்ற 'உதயன்' படப்பிடிப்பாளர், படம் எடுக்க விடாமல் பொலீஸாரால் தடுக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று யாழ்பல்கலைக் கழக சுற்றாடலில் இடம்பெற்றது.

பொலீஸ் குவிப்பைப் படம் பிடிப்பதற்கு 'உதயன்' படப்பிடிப்பாளர் பல்கலைக்கழகச் சுற்றாடலுக்குச் செல்ல இருக்கின்றனர் என்ற தகவல நேற்றுக்காலை 8 மணியளவில் - நேரத்துடனேயே - வடபகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமது நடவடிக்கைகள் குறித்து பொலீஸ் தரப்பில் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் பெயரால் இன்று நடத்த ஏற்பாடாகியிருக்கும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு தொடர்பான பொலீஸ் தரப்பு நடவடிக்கைகள் குறித்து உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் நேற்றிரவு உதயனுக்கு விளக்கமளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளை கடந்த 10ஆம் திகதி வடபகுதி இராணுவ உயர் அதிகாரிகள் சந்தித்துப் பேசினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய படை நடவடிக்கைகளால் சமாதான முயற்சிக்கு பெரும் பாதிப்பு

### எரிக் சொல்ஹெய்முக்கு பாலசிங்கம் எடுத்துரைப்பு

லண்டன்,ஜன.17

யாழ்.குடாநாட்டில் இலங்கைப் படைகள் புதிதாக ஆரம்பித்திருக்கும் பெரும் படை நகர்வுத் தாக்குதலை தாங்கள் தீவிரமாக எதிர்த்து வருவதாக அறிவித்திருக்கும் புலிகள், இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெற இருப்பதை முன்கூட்டியே நோர்வே சமாதானத் தூதருக்கு தாங்கள் தெரியப்படுத்திவிட்டதாகவும் -

இத்தகைய தாக்குதல்கள் பிணக்கைத் தீவிரப்படுத்தி, கஸ்போதைய சமாதான முன்முயற்சிகளைப் பெரிதும் பாதித்துவிடும் என்பதை இலங்கை அரசிற்கு எடுத்துரைக்கும்படி நோர்வே சமாதானத் தூதரை தாங்கள் ஏற்கனவே கோரி இருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

புலிகளின் லண்டன் தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பிலேயே இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளாலி - எழுதுமட்டுவாழ் - நாகர்கோயில் கடக்கிலுள்ள புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது இலங்கைப் படைகள் பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

யுத்த டாங்கிகள், கனரகப் பீரங்கிகள் சகிதம் ஆயிரக்கணக்கான அரச துருப்புகள் செவ்வாய் காலை பெரும் தாக்குதலைத் தொடங்கின. மிக் யுத்த விமானங்களும், கிபிர் குண்டுவீச்சு விமானங்களும், அரச இராணுவத்திற்கு வான்வழித் தாக்குதலை நடத்தி உதவுகின்றன.

முழுநாளும் தீவிர சண்டை நீடித்

(12ஆம் பக்கம் பார்க்க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1971 - 08 - 30

மறைவு 2000 - 12 - 18

## திருமதி குகன் வித்யா

பரம்பரை துலக்க வந்த ஒளிச்சுடரானவளே!
பரம்பொருள் பாதம் நாடி விரைந்ததும் ஏனோ?
தேவுலகு வரவேற்க தேவரெல்லாம் உபசரிக்க
பூவுலகு விடை கொடுக்க விண்ணகம் சென்றீரோ?
அன்பின் குலவிளக்கே உமது நினைவலைகள்
எம்மை விட்டகலாது.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போம்.

*மதவடி ஒழுங்கை,*
*சுதுமலைவடக்கு,*
*சுதுமலை.*

(83030)

அன்புடன் அன்னாரின்
கணவர், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## பொன்னையா கணபதிப்பிள்ளை

(பிரத்தியேக ஆங்கில ஆசிரியர் பிரித்தானிய ஆட்சியில் பிரதம லிகிதர் திருமலைத் துறைமுகம்)

**தோற்றம்: 1915.03.07** **மறைவு: 2000.12.18**

**ஒருமையுடன் நினது திருவடி மலரடி நினைக்கின்ற**
**உத்தமர் தம் உறவு வேண்டும் என்ற சொல்லுக்கு**

உதாரணமாக வாழ்ந்தவர் அமரர் பொன்னையா கணபதிப்பிள்ளை அவர்கள்.

18.12..2000இல் இறைவனடி சேர்ந்த எமது தந்தையாரின் மரணச்சடங்கில் பங்குபற்றி எமக்கு ஆறுதலும் ஆதரவும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் ஏனைய அன்பு நெஞ்சங்களுக்கும் எமது கண்ணீர் மல்கிய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (17.01.2001) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் பொ.கணபதிப்பிள்ளையின் ஆன்மா எம்பெருமான் சிவபெருமான் கழலடியில் ஈடில்லா இன்பம் பெறுவதாக!

*மகள்:*
*திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன்*
*ஐயனார் கோயிலடி,*
*கொக்குவில்மேற்கு,*
*கொக்குவில்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(83021)

## நீர் விநியோகம் தடைப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன 17

யாழ்.மாநகரசபையின் நீர் விநியோகப் பிரதான தாங்கிக்கு நீர் வழங்கும் குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ளமையால் நீர் விநியோகம் தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளது என்று மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதால் விரைவில் நீர் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் -

குருநகர் தாங்கியூடான நீர் விநியோகம் வழமைபோல் இருக்கும் என்றும் - அவர் மேலும் கூறினார்.(உ-3)

## ஆயுர்வேத மருத்துவர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.17

ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் சுதேச வைத்தியத்துறை அமைச்சில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் 5ஆம் அணி முதல் 8ஆம அணி வரையில் உள்ள அணிகளைச் சேர்ந்த 20 பேர் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்களை யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் க.பவானி கொழும்பில் இருந்து இன்று எடுத்து வருகின்றார்.

சம்பந்தப்பட்டவர்கள் தமது கடிதங்களை அவரிடம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.(உ-3)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவு

சண்டிலிப்பாய்,ஜன.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பனவற்றுக்கான உதவிப்பணம் பெறுபவர்களினது தை மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-100)

## வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்.ஜன.17

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஏழாலை சிவ.சண்முகவடிவேல் 'வன்தொண்டர் வாக்குவாதம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். இந்நிகழ்ச்சிக்கான அறிமுக உரையை பேரவை உறுப்பினர் க.அருள்லிங்கம் நிகழ்த்துவார். (உ-135)

## மீனவர் நிவாரண கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜன.17

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த மீனவக் குடும்பங்களில் மீனவ நிவாரணம் பெறுவதற்காக முத்திரை ஒட்டி பற்றுச் சீட்டில் கையொப்பம் இட்டவர்களுக்கான கொடுப்பனவுகள், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

கொடுப்பனவு பெறுபவர்களைத் தமது வங்கிக்குச் சென்று பணத்தைப் பெறும்படி அவர் கேட்டுள்ளார்.(உ-3)


நாகம்ஸ்
சுன்னாகம்
டைட்டானிக்
(தமிழ் ~ நீல்ஸ்)
இது ஓர் உண்மைச் சம்பவம்.
காட்சிகள்:
10.30, 2.30 (புதிய நேரம்)
(83041)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், சிம்ரன்,
லைலா, ரகுவரன்,
வையாபுரி
மற்றும் பலரின் நடிப்பில்
பார்த்தேன்
ரசித்தேன்
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)
(C/14851)

BETTER YOUR WRITING SKILL
125
Model Compositions
* OBJECTIVE * DESCRIPTIVE
* NARRATIVE * COMMUNICATIVE
USEFUL FOR SECONDARY. TECHNICAL AND UNIVERSITY STUDENTS.
PRICE: Rs 130/=
AVAILABLE IN ALL THE LEADING BOOK- SHOPS ,
(83033)


## APPRECIATION

MR.Dr.Arumaynayagam , Assistant Director of English Zone one retired from service On 31 st December 2000. We highly appreciate his dedicated service and his sterling qualities a jovial and a dynamic personality a jewel of a man, agem of a Director of English. A humble and a simple servant. He won the hearts of all English teachers by his affable ways. We will always remember him with love, and gratitude.

(83032)

**TEACHERS OF ENGLISH,**
**Kokuvil Hindu College, kokuvil.**

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மருந்தாளர்

திரு.காசிப்பிள்ளை வைரமுத்து

அவர்களின் அன்புச் சகோதரன்

**காசிப்பிள்ளை நல்லதம்பி**

அவர்களது மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(83036)

மருந்தாளர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை நல்லதம்பி (அளவெட்டி)

அளவெட்டி வடக்கு தோரையடியை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நல்லதம்பி அவர்கள் நேற்று (16.01.2001)செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி தனலட்சுமி - விநாசித்தம்பி, காலஞ்சென்ற Dr.முருகேசம்பிள்ளை, சுப்பிரமணியம் (Engineer, Colombo), வைரமுத்து (Pharmacist, teaching hospital), சதாசிவம் (Rtd.Railway) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2001) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் கீழ்கண்ட விலாசத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*34,குமாரசுவாமி வீதி,*
*கந்தர்மடம்.*

(83029)

தகவல்:
வி.தனலட்சுமி (சகோதரி)

## J.S. அரியரட்ணம்

(இளைப்பாறிய அதிபர்,யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

127/1 கோவில் வீதியைச் சேர்ந்த **J.S.**அரியரட்ணம் (28-12-2000) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலமலரின் அன்புக் கணவரும், **DR**.ஜெயக்குமார், ராஜ்குமார், சாந்திக்குமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வசந்தி, சியாமளா, ஜெபரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (03-01-2001) புதன்கிழமை லண்டனில் நடைபெற்றது.

**38A,** *றக்கா ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(83035)

தகவல்:
**இந்திராணி கிருபராஜ்**

## திருமதி முருகேசு மனோன்மணி

நுணாவில் மேற்கு, மடத்தடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், புலவர் வளவு நவாலி வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு மனோன்மணி 13.01.2001 அன்று காலமானார்.

அன்னார் ஏரம்பு முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குருசாமி (சா.ப.நோ.கூ.சங்கம்), சிவானந்தம் , திலகவதி, யோகம்மா, சிவசாமி (தென்மராட்சிக் கல்வி வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தி, சதீஸ் (கொழும்பு), சசிகரன் (ஜேர்மனி), சுகந்தி (ஜேர்மனி), சிறிகரன் (லண்டன்), காலஞ்சென்ற சுதர்சன், ஜெயந்தி, துஸ்யந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் துரைரட்ணம் (S.T.S. ரான்ஸ்போட்), சந்திரா (கொழும்பு), றோமனா (ஜேர்மனி), வாசுகி, சபேசன (டோகா), சிவம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜித் அலெக்ஸ், திலக்ஸன், தனுஸன், விதுஸன், அர்ச்சனா, மனுவல், துளசிகா, வெனிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2001) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவாலியில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு ஆரையம்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

(83037)

தகவல்:
**எஸ்.துரை (மருமகன்)**

உதயன்

## அச்சமும் உத்தியும்

இலங்கையில் ஜனநாயகம் நிலவுவதாக, ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகப் பறை சாற்றப்படுகிறது. இத்தகைய ஆட்சியின் கீழ் மக்களுக்கு உள்ள ஜனநாயக உரிமைகள் மட்டுமன்றி அவர்களுக்குரிய மனித உரிமைகளும் எவ்வித ஊறுமின்றி வழங்கப்படுவதாக அறிக்கைகள் மூலமும் மகாநாட்டுரைகள் மற்றும் ஊடகங்கள் மூலமும் வெளிஉலகத்துக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை என்ற சொல்லினுள் தமிழர் பிரதேசமான வடக்கு — கிழக்கு மாகாணமும் அடக்கப்படுகிறது. அதாவது அந்தப் பிராந்தியத்திலும் ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு பழுதின்றிக் கிடைப்பதாக, அவர்கள் அவற்றைத் தடங்கலின்றி அனுபவிப்பதாக சர்வதேசத்துக்குச் சொல்லப்படுகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் மக்கள் தமது உள்ளக் கிடக்கையை மிக அமைதியான முறையில் எவருக்கும் தீங்கிழைக்காத, இம்சை அற்ற வழியில் தெரிவிக்க முன்வந்ததை அரசு விரும்பவில்லை.

மக்கள் ஒரே அணியில் சேர்ந்து, ஓர் இடத்தில் திரண்டு, அமர்ந்திருந்து, தமது விருப்பமும் வேணவாவும் இவைதான் என்று ஒரே குரலில் தென்னிலங்கை மக்களுக்கும் உலக மக்களுக்கும் உரத்துச் சொல்வது அரசுக்குப் பிடித்தமானதாக இல்லை.

அவசரகாலச் சட்டத்தைத் தனக்குச் சாதகமாகக் கையில் எடுத்துக்கொண்டு மக்களுடைய கருத்துச் சுதந்திரத்துக்கும் ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கும் தமிழ்ப் பகுதிகளில் மட்டும் தடங்கலிடும் அரசின் ஏற்பாடு, பின்னால் அது தமிழ் மக்கள் மீது நூறு வீத அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் என்பதற்கான சமிக்ஞையாக இருக்குமோ என்று குடாநாட்டு மக்கள் சந்தேகிக்கிறார்கள்!

சமாதானத்தை வலியுறுத்தவும், ஈழத்தமிழர்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே என்பதனை உலகுக்குத் தெரிவிக்கவுமே 'பொங்கு தமிழ்' நிகழ்வு ஏற்பாடாகி உள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் அதனை முன்னெடுக்கிறார்கள் என்பதற்காக, ஏனையோர் அதில் பங்குகொள்ளக்கூடாது, ஆதரவளிக்கக் கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா? எந்த ஒரு விடயத்தையும் ஏதோ ஒரு தரப்பு முன்னெடுக்க மக்களில் ஏனையோர் — அதில் விருப்பமுள்ளோர் — கலந்து கொள்வதுதான் வழமை.

அந்த வகையில், ''பொங்கு தமிழ்' நிகழ்வில் பங்குகொள்ள குடாநாட்டின் சமூக, சமய நிறுவன, அரசியல் தரப்புக்கள் மிக அமோக ஆதரவை அளிக்க முன்வந்துள்ளன. குடாநாட்டு மக்களின் இந்த மன ஒற்றுமை — கருத்தொற்றுமை — கண்டு அரசாங்கம் அச்சம் அடைந்துள்ளது. அந்த அச்சத்தின் வெளிப்பாடே தடுப்பு முயற்சியும் அதனை நியாயப்படுத்தும் விளக்கங்களும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை கோரும் ஏகோபித்த எழுச்சி திரண்டு மிடுக்கடைந்துவிட்டால், சர்வதேச உலகத்துக்கு அது எட்டிவிட்டால் தான் நினைத்த தீர்வு ஒன்றை தமிழர்கள் மீது திணிப்பது கடினமாகிவிடும் என்பது அரசுக்குத் தெரியும். அதனால் குடாநாட்டு மக்களின் (அரசியல்) ஒற்றுமையைக் குலைப்பதற்கு— அதனை முளையிலேயே கிள்ளி எறிந்து விட — இப்படி ஓர் உத்தியா?

# திட்ட அலுவலர்களுக்கு விரைவில் பதவி உயர்வு

வலிகாமம் மேற்கு, ஜன. 17

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுகின்ற திட்ட அலுவலர்கள் அனைவரும் மிக விரைவில் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்களாகப் பதவி உயர்த்தப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் சகல திட்ட அலுவலர்களையும் அமைச்சுக்கு உள்வாங்கி திட்டமிடல் சேவையின் தரம் II வகுப்பு II இற்கு பதவி உயர்த்தி திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்களாக நியமனம் செய்ய நடவடிகை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் மிக விரைவில் இவர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணக்களில் கடமையாற்றும் சுமார் 55 திட்ட அலுவலர்கள் இதனால் நன்மையடையவுள்ளனர். [ஜ-175]

## சீருடை விநியோகம்

மறவன்புலோ சகல கலாவல்லிவித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெறும்.

மாணவர்களை தற்பொழுது கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் ச. ஞானலிங்கம் கேட்டுள்ளார். [ம]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம். ஜன. 17

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆய்வு முறையியல் கருத்தரங்குத் தொடரில் இன்று இடம்பெறவிருந்த நான்காவது நாள் நிகழ்வுகள் இடம்பெறமாட்டா என்று தூய விஞ்ஞானப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (-3)

## ஆங்கில ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கான எழுத்துப் பரீட்சை

பருத்தித்துறை, ஜன. 17

வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். (ம-118)

## மணவாளக்கோலம்

நெல்லியடி, ஜன. 17

புலோலி கிழக்கு உத்திராவத்தை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த மணவாளக் கோல விழா இன்று காலை நடைபெறவுள்ளது. (ம-109)

## வரவை உறுதிப்படுத்த அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 17

கோப்பாய், பலாலி ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை நிறைவு செய்துள்ள வெளி மாவட்ட ஆசிரியர்கள் அனைவரும் தற்காலிகமாக மேலதிகமாகாண கல்விப் பணிமனையில் தமது வரவை உறுதிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துப்பிரச்சினை காரணமாக தமது இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ள சுமார் 58 பேர் தமது கையொப்பத்தை மேலதிக மாகாணப் பணிமனையில் தற்போது இட்டு வருவதாக மேலதிகமாகாணக் கல்விப் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-10)

# எழுச்சி நிகழ்வை மாணவர்களே...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளாகிய அவர்களின் தனித் தேசியத்தன்மை மரபுவழித் தாயகம், இவற்றின் வழிவந்த சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வற்புறுத்தி மேலும் முன்னெடுத்துச் செல்வதற்காக இன்று (17-01-2001) ''பொங்கு தமிழ்'' எழுச்சியை யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் அங்கத்தவர்களாகிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் சங்கம், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கம், பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கம், பல்கலைக்கழக எழுது வினைஞர் தொழில் நுட்ப வியலாளர் சங்கம் ஆகியோரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மனித நேய அமைப்புக்களும் அத்தோடு மதத் தலைவர்களும் இணைந்து இந்த நிகழ்வை நடத்துவதற்குத் தீர்மானித்திருந்தனர்.

### பல்வேறு கருத்துகள்

இதற்கிடையில் எமது இந்தக் கோரிக்கைகள் பற்றிப் பத்திரிகைகளில் பல்வேறு விதயான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இதில் முதன்மை பெறுவது வடபகுதிக்கான இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் அன்ரன் விஜேந்திராவினால் இந்த எழுச்சி புலிகளின் தூண்டுதலால் ஒரு சிலர் நாட்டின் தற்போதைய அமைதியைக் குலைப்பதற்கு மேற்கொள்ளும் சதி என்றும் இதில் அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்கு சாத்தியம் இருப்பதாகவும் இந்த எழுச்சி நிகழ்வைத் தான் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை எனவும் பலாலியில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்தாகும். மேற்படி கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் யாழ். மாவட்ட பொலீஸ் அதிகாரி ஒருபடி மேலே சென்று இத்தகைய நிகழ்வுகளில் பங்குபற்றுவோர் மீது குண்டாந்தடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகை அடித்தல் போன்ற வேண்டப்படாத நிகழ்வுகள் இடம்பெறும் எனவும் அச்சுறுத்தியுள்ளார்.

### சிவில் நிர்வாகத்தின் பெயரில் இராணுவம்

மேற்கூறிய பின்னணியானது யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது என்ற போர்வையில் அரச இயந்திரத்தின் இராணுவ அலகே தீர்மானத்தை திணிக்கின்றது என்பதைத் துலாம்பரப்படுத்தியுள்ளது. கடந்த சில நாள்களாக யாழ். பல்கலைக்கழகத்தைச் சுற்றி வளைத்து இராணுவம், பொலீஸ் கூட்டாக இணைந்து எழுச்சி நிகழ்வை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மும்முரமாக்கியதுடன் மாணவர்களைக் கைது செய்து எழுச்சி சுவரொட்டிகளைக் கிழித்தும் அடாவடித்தனமாக நடந்து கொண்டிருக்கின்றது.

### மீளாய்வு

இப்பின்னணியில் சாத்வீக அடிப்படையிலே அடிப்படை மனித உரிமையை நிலைநாட்டும் வகையில் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளை வெளிப்படுத்த நாம் மேற்கொள்ள இருந்த ''பொங்கு தமிழ்'' எழுச்சியை எல்லா அமைப்புக்களும் இணைந்து நடத்துவது பற்றி மீளாய்வு செய்வது தவிர்க்க முடியாதது மட்டுமன்றி இது காலத்தின் நிர்ப்பந்தமும் ஆகும். மக்கள் எதுவித பயமுமின்றி சுதந்திரமாக இந்நிகழ்வில் பங்குபற்றுவதையே நாம் எல்லோரும் விரும்புகின்றோம். ஆனால் அது இன்று இராணுவ இரும்புக் கரங்களின் துப்பாக்கி முனையால் நசுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். ஆதலால் எம்மக்களில் நாம் கொண்ட அக்கறை காரணமாகவும் இந்த எழுச்சியின் நீண்டகால பரிமாணங்களைக் கருத்திற்கொண்டும் நிராயுதபாணியான தமிழ்பேசும் மக்களை ஆயுதத்தின் முன்நிறுத்த விரும்பவில்லை என்பதாலும் இந்தநிகழ்வில்மக்கள் பங்கேற்பினை தவிர்ப்பதெனத் தீர்மானித்துள்ளோம். மக்கள் தங்களின் அபிலாசைகளை ஒன்றிணைந்து வெளிப்படுத்த விடாமல் செய்யும் இராணுவ அடக்கு முறையையும், மனித உரிமை மீறலையும் அன்றைய தினம் பல்கலைக்கழக சமுகம் இந்நிகழ்வின் வழியாக சர்வதேச சமூகத்திற்கு அம்பலப் படுத்தும்.

### அரசுடன் துணைபோகும் தமிழ்க் கட்சி

நாங்கள் முன்வைக்கும் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தேசிய இனம் ஆகியன இன்று நேற்று தமிழ் மக்கள் சார்பின் முன்வைக்கப்பட்டவை அல்ல. 1949இல் இத்தகைய கோரிக்கைகள் தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டன. 1985 இல் திம்பு மாகாநாட்டில் தமிழ் பேசும் இயக்கங்கள் எல்லாவற்றாலும் ஒருமித்த குரலில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றாகும். இதே கோரிக்கையை தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்— நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் — கட்சிகள்வலியுறுத்துவது மட்டுமன்றி தென்னிலங்கையில் உள்ள முற்போக்குக் கருத்துள்ள சக்திகளும் இலங்கையில் நீடித்த நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின், அரசாங்கம் பேரினவாத சிந்தனையிலிருந்து முற்றாக விடுபட்டு தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன. இத்தகைய இராணுவ அடக்கு முறையோடு தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்க் கட்சி ஒன்று அரசுடன் துணை போவதையிட்டு ஆழ்ந்த கவலையும் அதிருப்தியும் கொண்டுள்ளோம்.

### அரசின் போலி முகம்

அண்மையில் இலங்கை வந்த பிரித்தானிய வெளிவிவகார இணை அமைச்சர் பீற்றர் ஹெயின் அவர்கள் கூட தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்குரியவர்கள் எனக் கூறியிருந்தது யாவரும் அறிந்ததே. இப்பின்னணியில் நீண்ட வரலாற்றுப் பாரம் பரியமுடைய இந்த அபிலாசையை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்து இந்த எழுச்சியை நடத்துவதும் அவர்களின் தூண்டுதலால் இடம்பெறுகின்றது எனக் கூறுவது மிகவும் அபத்தமானதாகும். இனப் பிரச்சனைக்கான நிரந்தரமான தீர்வை எட்டுவதற்கு வழிகோலும் சூழலாக உள்ள யுத்த நிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தும் கூட அரசு அதனை உதாசீனப் படுத்தி மேற்கண்ட விதமான பொய்யான பிரசாரங்களின் மூலம் தொடர்ந்தும் தன் அடக்குமுறையை தொடர விரும்புவதாகவே நாம் கருத வேண்டியிருக்கிறது. அத்தோடு யுத்தத்தையும் தீவிரப்படுத்தி அழிவுகளை மேற்கொண்டு வருகிறது தென்னிலங்கையில் சமாதானத்திற்கெதிரான ஊர்வலங்களுக்கும் கொடும்பாவி எரிப்புக்கும் அனுமதி வழங்கும் அரசு, இங்கே எங்களது மக்களின் சமாதானக் குரலை அடக்க முனைவதன் மூலம் தனது சமாதானத்துக்கான போலி முகத்தை தானாகவே அம்பலப்படுத்தி நிற்கின்றது.

### தீர்வுக்கு வழி

எனவே, நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் யுத்த களத்தில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மூன்றாம் தர மத்தியஸ்தத்துடன அமைதியான சூழலில் பேச வேண்டும். இவ்வாறு பேசும்போது எமக்கு ஒரு நீடித்த அமைதியை மட்டுமன்றி விடிவையும் தரும் அரசமைப்பு உருவாக வேண்டும். எமது கடந்த கால கசப்பான அனுபவங்களிலிருந்து நம் புரிந்து கொண்டது யாதெனில், மூன்றாம் தர மத்தியஸ்தம் ஒன்றின் மூலம்தான் தமிழ் மக்களின் தேசியத் தன்மையையும் மரபுவழித் தாயக உரிமை என்பதையும் எத்தகைய அமைப்பின் கீழ் இந்த நாட்டில் சம உரிமையுடன் தமிழ் மக்கள் தங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியும் என்பதையும் பெறுவதற்கு வழி கிடைக்கும் என நாம் திடமாக நம்புகின்றோம்

அமைதி வழியில் எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் இந்நிகழ்வினைத் தடுக்கும் எந்தவிதமான அடக்குமுறை நடவடிக்கைகளுக்கும் அதனால் ஏற்படும் அசம்பாவிதங்களுக்கும் அரசும் அதனோடு இணைந்து செயலாற்றுபவர்களுமே பொறுப்பேற்க வேண்டும். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மேற்கொண்ட சாத்வீக போராட்டத்தை அரசுகள் அடக்கிய தன் விளைவாகவே அது இன்றைய ஆயுதப் போராட்டமாக பரிணமித்துள்ளது என்பது வரலாறு தந்த பாடமாகும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதயவாக்கு

களங்கமற்ற மனது மிகச் சிறந்த அறிவாற்றலை விட மேலானது.

## நாளை

தை 05

வியாழக்கிழமை

திதி: நவமி

முற்பகல் 11.39 வரை

நட்சத்திரம்: சுவாதி

காலை 7.27 வரை.

திருநீலகண்டர் குருபூசை

சுபநேரம்: 8.05 — 9.35

ராகுகாலம் 2.05 — 3.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# மக்கள் தங்கள் விருப்பப்படி குடியமர்வதைத் தடுக்கக்கூடாது

## ஈ.பி.டி.பி. கூறுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 17

தென்மராட்சிப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவதை எவரும் அச்சுறுத்தக்கூடாது என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மண் எங்களின் சொந்த மண் என்னும் இறுமாப்புடன் வாழ்ந்து வந்த மக்களை அகதிகளாக்கி அலைய வைத்தது போதும். மக்கள் வாழும் பிரதேசங்களை போர் முனைகளாக மாற்றி உடைமைகளுக்கு அழிவையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவதும் போதும். மக்கள் வாழும் பிரதேசங்களையும் வயல் நிலங்களையும் மிதிவெடிகளின் பூமியாக்கியதும் போதும். மக்கள் தங்கள் சொந்த மண்ணில் குடியேறி நிம்மதியாக வாழ சகல தரப்பும் தத்தமது ஒத்துழைப்பை முடிந்தளவுக்கு நல்க முன்வர வேண்டும்.

தென்மராட்சியில் மீளக்குடியேறுவதை மக்கள் தவிர்க்க வேண்டுமெனப் புலிகள் கோரிக்கை விடுப்பது எந்த வகையிலும் நியாயமற்றது. ஏனெனில் இடம்பெயர்ந்த மக்களின் நலனோம்பும் செயற்பாடுகள் எதிலும் புலிகள் பங்கேற்கவில்லை. ஏற்படுகின்ற உயிர் உடைமை இழப்புக்கள் எதற்கும் நஷ்டஈடு வழங்குவதற்கோ நிவாரணம் பெற்றுத் தருவதற்கோ ஆர்வம் காட்டவும் இல்லை.

எனவே குடியேறுவதைத் தவிர்க்கும்படி ஆலோசனை கூறுவதென்பது மக்களின் வாழ்வு உரிமையை மறுக்கும் அச்சுறுத்தலாகும். இதேவேளை சொந்தப் பிரதேசங்களில் வாழ முனையும் மக்களுக்குத் தேவையான உச்சகட்ட ஒத்துழைப்பும் பாதுகாப்பும் பாதுகாப்புப் படையினரால் வழங்கப்பட வேண்டும்.

1996 இல் சூரியகதிர் இராணுவ நடவடிக்கையை அடுத்து மக்கள் வலிகாமம் பகுதிக்குத் திரும்பிய போதும் புலிகள் இவ்வாறு கூறி அச்சுறுத்தி வந்ததும் சுட்டிக் காட்டத்தக்கது.

ஆனால் புலிகளின் எச்சரிக்கையையும் அறிவுரைகளையும் மக்கள் புறக்கணித்து வலிகாமம் பகுதிக்குத் திரும்பிய மக்கள் சமாதான சகவாழ்வின் மீது தமக்குள்ள பற்று உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

மக்கள் வாழும் பிரதேசங்களில் பொறி வெடிகளையும் கண்ணிவெடிகளையும் புதைத்து வைத்துள்ளதே தவறான செய்கையாக இருக்கும் போது இவற்றைச் சுட்டிக்காட்டி அச்சுறுத்துவது கொடூரமானதாகும்.

புலிகள் வந்து பிரதேசத்தை மீட்டுத்தரவேண்டும் என்று படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாழும் மக்களில் பலரும் ஆவல் கொண்டதாக இல்லை. புலிகள் மீண்டும் பிரவேசிக்க எத்தனிப்பதாலும் நவீனரக ஆயுதங்கள் சகிதமாகத் தமது அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட முயல்வதாலுமே தென்மராட்சிப் பிரதேசம் ஆபத்தாகின்றது.

போரில் ஈடுபடும் இருதரப்பினரும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கக் கூடாது என்பதே நோர்வே அரசு முன்வைத்துள்ள ஆலோசனைகளின் அடிப்படையான அம்சம் என்பதையும் சுட்டிக் காட்டலாம் — என்றுள்ளது.

(ஐ — 3)

## வீதியில் கிடக்கும் கற்களால் மக்களுக்குச் சிரமம்

அச்சுவேலி தெற்கு காட்டுமலை கந்தசாமி கோயில் வீதியைத் திருத்தி அமைப்பதற்கெனப் போடப்பட்ட கற்கள் உரியமுறையில் பயன்படுத்தப்படாமல் சிதறுண்டு கிடப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

கற்கள் சிதறுண்டு கிடப்பதால் ஏற்பட்ட விபத்தில் சிக்குண்டு மயிலு பரம் (வயது 40) என்பவர் இரண்டு கால்களும் செயல் இழந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நீண்டகாலமாக இந்த வீதி திருத்தப்படாமல், கற்கள் சிதறுண்ட நிலையில் இருப்பதால் பிரயாணிகள் இயல்பு நிலையில் பயணம் செய்ய முடியாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
02 — 04 — 1916

மறைவு
18 — 12 — 2000

அமரர்

### நாகமுத்து சின்னையா

வேரோடி விருட்சமாய் வளர்ந்த
எம் குடும்பங்களுக்கெல்லாம் குலவிளக்காய்
திகழ்ந்த பாசத்தின் திருவுருவே!
உன் திருமுகம் எம் கண்களிலிருந்து மறைந்து
முப்பத்தொரு நாள்கள் முடிந்து போய்விட்டாலும்
கல்லிற் பொறித்த சிற்பமாய் காலமெல்லாம்
எம் நெஞ்சில் இருக்கும் உன் நினைவு.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

8 ஆம் வட்டாரம்,
அம்பிகைநகர்,
வேலணை மேற்கு,

(82884)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கதிர்காமு பொன்னுத்துரை

மலர்வு:
18 - 02 - 1937

உதிர்வு:
18 - 12 - 2000

எங்கள் அன்புத் தெய்வம் எங்களை விட்டு நீங்கினாலும் அவர் நினைவுகள் எங்களை விட்டகலாது! இந் நினைவு நாளில் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

- குடும்பத்தினர்

"வாசன் தொழிலகம்",
மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு.

(82990)

---

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வாணர் குடியிருப்பு விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட

சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு:

1 ஆம் பரிசு இல. 2864, 2 ஆம் பரிசு இல. 2918
3 ஆம் பரிசு இல. 0956

ஆறுதல் பரிசுகள் இலக்கம்:
2765, 1479, 1016, 0228, 0422

பரிசுகளை30-01-2001க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

புலோலி மேற்கு. (சி/ 14858) செயலாளர்.

---

## COMPUTER POINT

( Training Division )
Regd. No. J/DS/BR/63/97
No. 28, St Patrick's Rd,
Jaffna.

### COMPUTER COURSES

- Beginner's Computer Studies [Special Course for Beginners]
- Advanced Computer Studies
- Dip in Computer Programming & PC. Applications
- Certificate Courses

- சிறார்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புகள் ( Year 6 - 10 )
- G.C E O/L, G.C E A/L, பல்கலைக்கழக மாணவர்கள் தொழில் புரிவோருக்கான விசேட கணனிப் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து வகுப்புகளும் வார நாள்கள், சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.
- உடன் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று தங்கள் அனுமதியை உறுதிப்படுத்தவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 27 - 01 - 2001

Lectures By:— S. R. LOGENDRA D.C.A,
(Systems Analyst),
(M C. S India),
DIRECTOR.

(82925)

---

## அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனம் விட்டிறந்த
இணுவில் மேற்கு இணுவில்

**செல்லப்பா கந்தையா**வின்
மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்
மரணமெய்தியவர்

வழ. இல. தத்துவம் / 07

எதிர்

1. அப்பாத்துரை குகநேயனும்,
2. பெண் சிவகாமசுந்தரியும்,

முன்னர் செல்லப்பா கந்தையா மகள்
சிவகாமசுந்தரி,
மூனாமலை ஒழுங்கை,
மானிப்பாய்.

மனுதாரர்கள்

மேலே விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச்சொத்து தொடர்பில் மரணசாதனத்தை எண்பிப்பதற்காகவும் மரணசாதன அதிகாரப் பத்திரம் பெறுவதற்காகவும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. எனவே, மரணசாதனம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கலுக்கான கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனை உடைய ஆளெவரும் 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7-ந் திகதி முன்னர் (சத்தியக்கடதாசியின் ஆதாரத்துடன்) அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி,
2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் திகதி

செ. விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்.
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

வரைவு,
திருமதி ச. இளங்கோவன்
மனுதாரரின் சட்டத்தரணி.

04 - 01 - 2001 தவணை 08 - 02 - 2001-க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

[சி/14861]

# மலையக மக்கள் முன்னணியும் எழுச்சி நிகழ்வுக்கு முழு ஆதரவு!

கொழும்பு,ஜன.17

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக துணிவுடன் செயற்படும் யாழ்.பல்கலைக்கழக மாணவ சமூகத்தினரை மலையக மக்கள் முன்னணி பாராட்டுவதாகவும் -

அவர்களின் நியாயமான செயற்பாட்டிற்காக மலையக மக்கள் முன்னணியின் உறுதியுடன் குரல் கொடுக்குமென்றும் -

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் -

சிறுபான்மைத் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றியும் அரசாங்கம் யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமது கருத்தை வெளிப்படுத்த மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியிலான செயற்பாட்டை ஆயுத படையினரைக் கொண்டு அடக்க முயல்வது அப்பட்டமான அரச பயங்கரவாதமாகும்.

நியாயமான அடிப்படை உரிமைகளுக்காக சாத்வீகமாக எழுப்பப்பட்ட குரலை நசுக்க முற்பட்டதே தற்போதைய யுத்தத்திற்கான தோற்றுவாயாகும். ஆயுதத்தினால் உரிமைக் குரலை நசுக்க முயன்ற தன் பின்விளைவுகளை இலங்கை வரலாறு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறும் அரசாங்கம், அம்மக்களின் அரசியல் உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்கே தடை விதிப்பது அரசின் சுய ரூபத்தையே வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.

இந்நிலை தொடர்ந்தால் மனிதாபிமானமுள்ள சிந்தனையாளர்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் அரசாங்கம் அம்பலப்பட்டு அவமானப்படவே நேரிடும். அரசாங்கம் மீண்டும் மீண்டும் இதே முயற்சியில் ஈடுபடுவது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். (ஐ)

# ஆள்கள் இல்லாத வீடுகளில் அரியாலைப் பகுதியில் திருட்டு

கோண்டாவில்,ஜன.17

அரியாலைப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆள்கள் இல்லாத வீடுகளில் பொருள்கள் களவு போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருடர்கள் வீடுகளின் யன்னல் கிறில்கம்பிகள், கதவுகள் மற்றும் கூரை மரங்கள், ஓடுகள் என்று பல பொருள்களையும் திருடிச் செல்கின்றனர்.

காலையில் இப்பகுதிகளில் இராணுவத்தினர் சோதனைகளில் ஈடுபடுகின்ற போதிலும் நண்பகலுக்கு மேல் அவர்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. இந்த இடைவேளையைச் சாதகமாகப் பயன்படுத்தும் திருடர்கள் பொருள்களைச் சூறையாடும் வேலையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

முதல்நாள் வீட்டில் இருந்த பொருள்கள் அடுத்தநாள் காணாமல் போவதையிட்டு பொதுமக்கள் பெரும கவலை தெரிவிக்கின்றனர். (ம-86)

# யாழ்ப்பாணத்திலும் தியாகராஜ உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜன.17

தமிழ் நாடு திருவையாற்றில் ஆண்டு தோறும் இடம்பெறும் தியாகப் பிரம்ம இசைமஹோற்சவம் வட இலங்கை சங்கீத சபையின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளது.

எதிர் வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தலைமையில் இந்த விழா நடைபெறும்.

விழாவில் சங்கீத சபையின் இசைப் பீடத்தைச் சேர்ந்தோரால் பஞ்சரத்தின கீர்த்தனைகளின் அஞ்சலி, ஆராதனைகள் நடத்தப்படும். (ம)

## அபராதம்

சாவகச்சேரி,ஜன.17

மேய்ச்சலுக்காக காணியில் கட்டிவிடப்பட்ட பசுமாடு பட்டப்பகலில் திருடப்பட்டு மாட்டு இறைச்சி கடையில் விற்கப்பட்ட சம்பவம் அண்மையில் பொலிகண்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுத் தொடர்பாக பொலிகண்டிப் பகுதியைச் சேர்ந்த குணசிங்கம் சிவநாதன் (வயது - 26) என்பவர் சந்தேகத்தின் பேரில் வல்வெட்டித்துறைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

சந்தேக நபர் பசுமாடு திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிவான் மாட்டின் உரிமையாளருக்கு 6 ஆயிரம் ரூபா செலுத்தும்படி குற்றவாளிக்கு உத்தரவிட்டார். அத்துடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையத்தில கையொப்பமிட வேண்டும் எனவும் பணித்தார். (ம-31)

## கழகங்களுக்கு

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர் அல்லது செயலாளரை நாளை வியாழன் காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திற்கு தவறாது வருமாறு பிரதேச செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ம-175)

# மொறீசியஸ் சொக்கலிங்க மீனாட்சியம்மன் ஆலயத்தில் வெள்ளியன்று மகா கும்பாபிஷேகம்

**மொறீசியஸ் நாட்டின் போட் லூயிஸ் நகரில் உள்ள அருள் மிகு சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ள யாழ் மாவட்ட காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ந.சதாசிவஐயர் அங்கிருந்து அனுப்பிய குறிப்பு இது.**

மொறீசியஸ் நாட்டில் உள்ள பிரபலம் மிக்கதும் பழம்பெருமை வாய்ந்ததும் அந்நாட்டு மக்களால் 'கைலாசம்' என அழைக்கப்படுவதுமான சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயிலின் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 71 அடி உயரமான பஞ்சதள இராஜகோபுரம் ஒரு பக்கம மலையும் மறுபக்கம் கடலும் அமைந்த அழகான சூழலில் நிமிர்ந்து நிற்கின்றது. இந்துக்களை அதிகமாகக் கொண்ட இந்த நாட்டில் பல ஆலயங்கள் உள்ளன. இவற்றில் சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் ஆலயம் பெரியதும் சிறப்பானதுமாகும்.

மொறீசியஸ் இந்து மகாஜன சங்கம் எனும் அமைப்பானது இங்கு பல ஆலயங்களை நிர்வகித்து வருகின்றது. அந்த அமைப்பின் சிறப்பான செயற்பாடுகளுக்கு வழியமைத்துக் கொடுப்பது இந்த ஆலயமாகும். பெரும் நிலப்பரப்பில் முதியவர்களுக்காக 'மீனாட்சி இல்லம்' என்னும் பெயரில் இல்லம் அமைத்துப் பராமரித்து வருகிறார்கள். இங்கு ஆண்களுக்கென ஸ்ரீ ரமண மகரிஷி மண்டபம் எனவும் பெண்களுக்கென இராமலிங்க வள்ளலார் மண்டபம் எனவும் தனித்தனியாகப் பெயரிடப்பட்டு மண்டபங்கள் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

தென்மேற்கிலே கல்யாண மண்டபம், நூல்நிலையம் என்பனவும் வடமேற்கிலே விடுதி அமைத்து காலை நேரத்தில் பாடசாலையும் ஓய்வு நாள்களிலும் மாலையிலும் தமிழ், சமய, சங்கீத, மிருதங்க மற்றும் வீணை ஆகிய வகுப்புக்களை நடத்தி கலாசாரம் வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகிறார்கள். வடகிழக்கிலே அழகுமிகு தீர்த்தக்குளம் அமைந்திருப்பது வருபவர்களின் கண்களுக்குக் குளிர்மையாக அமைந்துள்ளது. ஆலயச் சூழல் எங்கும் மா, பலா, வாழை எனும் முக்கனிமரங்களும் ஆல், அரசு, வேம்பு, வில்வம், விளாத்தி, தென்னை, கமுகு, நெல்லி, கொன்றை, சந்தனம் போன்ற மரங்களாலும் பல்வேறு பூச்செடிகளாலும் அமைந்த அழகான நந்த வனமாகக் காட்சியளிக்கிறது.

இங்குள்ள இந்துக்கள் கலை, கலாசாரம் என்பவற்றைப் பேணுவதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள். யாவரும் எந்தவித வேறுபாடுமின்றி ஆலயத்தொண்டாற்றி வருகிறார்கள். அரச துறையிலும் அரசியல் துறையில் இருப்பவர்களும் அக்கறையுடன் தம்மாலானவற்றை செய்து வருகிறார்கள். தமிழ்மொழி பேசாதபோதும் தமிழ்ப் பெயர்களுடன நடை, உடை, பாவனைகளில் தமிழர்களாகத் தமிழ்க் கலாசாரம் பேணி வளர்த்து வருகின்ற இந்த மக்களைப பார்த்தவுடன் அவர் நம்மவர் எனும் உணர்வுடன் அவர்களுடன் தமிழில பேசத் தோன்றுகிறது.

பெரும்பாலான மக்கள் சைவ உணவு உண்பவர்களாக, சைவ அனுஷ்டானத்துடன் வாழ்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இந்து, கலாசார அமைச்சராக இருந்த செ.இராசதுரை மற்றும் வ.ந.சிவராசா ஆகியோரால் மொறீசியஸ் நாட்டுக்குச் சமயக் குருக்களாக அனுப்பி வைக்கப்பட்ட யாழ்ப்பாணம், அனலதீவைச் சேர்ந்த சமஸ்கிருத பண்டிதர் நடராஜ ஐயர் பாலசுப்பிரமணியசர்மா என்பவர் 20 வருடங்களாக சிவாச்சார்யப் பணியுடன் தமிழ், சமயப் பணியாற்றி வருகிறார். அன்னாரின் பாரியாரும் சமய கலாசார வளர்சசிக்காக தம்மாலான பணிகளை யாற்றி வருகிறார்.

**ந.சதாசிவ ஐயர்**
**(யாழ்.காணி மேலதிக மாவட்ட பதிவாளர்)**

குருக்களின் பெருமுயற்சியினால் இன்று இக்கோயில் யாழ்ப்பாணம், அராலியூர் சிற்பக்கலைஞர் கந்தசாமி கோபாலசிங்கத்தின் கைத்திறனில் உருவான கோபுரத்துடன் அழகான கோயிலாக உருவெடுத்து நிற்கின்றது.

தமிழ்நாட்டு ஆலய அமைப்பில் கட்டப்பட்டுள்ள இந்த ஆலயமானது சிறந்த கலையம்சத்துடன் அமைந்துள்ளது. ஆலயத்தின் கும்பாபிஷேக ஆரம்பத்தில் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் யாவரும் உலகம் சமாதான வழியில் சீருடன் வாழ கிரியைகள் சிறப்பாக அமைய அந்தணர்கள் சிறப்புடன் வேதம் ஓதி வழிபட வேண்டும் என்று அன்புடன் வேண்டி உள்ளனர்

தமிழ்நாடு, கேரளம், பாரக்குளம் அம்பிகாலயம் சுவாமி வெங்கடேஸ்வரானந்தா நேரில் வந்திருந்து ஆசி கூற ஆலய சிவாச்சாரியாரால் கும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. இக் கும்பாபிஷேகத்தை இலங்கை, இந்திய மற்றும் மொறீசியஸ் குருமார்கள் இணைந்து நடத்தவுள்ளனர். இந்த நிகழ்வினையொட்டி அரசாங்கத்தால் குறுகிய விடுமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.



கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போரூட் நிறுவனத் திட்ட அலுவலர் என்.கோகுலதாசன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைக் காணலாம். பாடசாலை அதிபர் ம.குட்டித்தம்பி, உப அதிபர் தெணியான் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ம)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை அண்டிய பகுதிகளில் பெருமளவில் காணப்பட்ட பாதீனியம் களைகள் அண்மையில் முற்றாக அழிக்கப்பட்டன.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மு.சிவராசா தலைமையில் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள், சாரணர்கள் ஆகியோர் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அவர்களில் ஒரு தொகுதியினர் களை ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (ம-175)

*(படம்:வலி மேற்குச் செய்தியாளர்)*

# வாசகர் திருமுகம்

## அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ்.கடல் நீரேரிப் பகுதியை அண்டி உள்ள பல வீதிகள் நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளன. இதனால் அந்த வீதிகளில் போக்குவரத்துச் செய்வதற்கு பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

குருநகர் பீச்றோட், சென்றல் ஈஸ்ற்வீதி, பாங்சால் வீதி, அடப்பன் வீதி ஆகியவற்றை இணைக்கும் 10க்கும் மேற்பட்ட குறுக்கு வீதிகளும் - ஸ்ரேசன் வீதி, ஓடக்கரை வீதி, பாசையூர் செ.அன்ரனீஸ் வீதி, பாசையூர் 1ஆம்,2ஆம்,3ஆம் குறுக்குத் தெருக்கள் மற்றும் கொழும்புத்துறை, நாவாந்துறையிலுள்ள சகல வீதிகளும் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இப்பகுதி மக்கள் கடந்த ஆண்டு முற்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்தாலும் தொழில் நிமித்தம் அவர்கள் இங்கு வந்து செல்கிறார்கள்.

வலை, கயிறு மற்றும் மீன்களைக் கொண்டு செல்லும் பெட்டிகள் என்பவற்றைச் சைக்கிள்களில் கட்டிக் கொண்டு செல்பவர்கள் இந்த குன்றும் குழியுமான வீதிகளில் அடிக்கடி விழுந்து எழுகிறார்கள். இதனால் அவர்களுக்கு சரீரக் காயங்கள் ஏற்படுவதுடன் அவர்களது சைக்கிள்களும் உடைந்து போகின்றன. இதனால் அவர்கள் மிகவும் கஷ்ரப்படுகிறார்கள்.

இராணுவக் கெடுபிடிகள், கடல் எல்லை, நேரக் கட்டுப்பாடு என்ற சட்ட திட்டங்களுடன் அவல வாழ்க்கை வாழும் இப்பகுதி மீனவர்களின் நலன் கருதி இந்த வீதிகள் விரைவில் திருத்தம் செய்யப்பட வேண்டும். அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

**ம.அலோசியஸ்,**

*யாழ்.மாநகரசபை,*
*முன்னாள் துணை முதல்வர்.*

## பரீட்சை முடிவுகள் எப்போது?

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதல்முதலாகத் தொடங்கப்பட்ட உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியின் முதலாவது தொகுதி மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் முடிவடைந்து நீண்ட காலமாகியும் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

இந்தக் கற்கை நெறிக்கான மூன்றாம் தொகுதி மாணவர்கள் உள்வாங்கப்பட்டு விட்டனர். எனினும் முதலாம் தொகுதி மாணவர்களின் பரீட்சை முடிவகள் இன்னும் வெளியாகவில்லை.

இதனால் முதலாம் தொகுதி மாணவர்கள் பெரிதும்பாதிப்படைந்துள்ளனர். தொழில்வாய்ப்பின்றி ஜீவனோ பாயத்திற்கே கஷ்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு முதலாம் தொகுதி மாணவர்களின் பரீட்சை முடிவுகளை பல்கலைக்கழக நிர்வாகம் விரைவில் வெளியிட வேண்டும் இந்த மாணவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவும் கற்ற கல்வியோடு தொடர்புடைய தொழிலைத் தேடிக் கொள்வதற்காகவும் பல்கலை நிர்வாகம் இந்த உதவியைச் செய்யுமா?

**- தொழிலற்ற முதலாம் தொகுதி மாணவர்கள்.**

# வவுனியா வளாகத்தில் விரைவில் கலைஅலகு

வலி. தென்மேற்கு,ஜன.17

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கலை அலகு ஒன்றை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கி யுள்ளது.

2000-2001 ஆம் கல்வியாண்டில் 35க்கும் மேற்பட்ட கலை மாணவர்கள் வன்னியில் பட்டப்படிப்பை தொடர வசதியாகவே இந்தக் கலை அலகு ஆரம்பிக்கப்பட உள்ளதாக வியா பார கற்கைகள் பீடாதிபதி இ.நந்த குமாரன் தெரிவித்தார்.

இதேவேளை-

2001-2002 ஆம் ஆண்டில் மேலும் 35 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (ம-185)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.17

சுன்னாகம் சூராவத்தை முத்து மாரியம்மன் கோயிலில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெற வுள்ளது. (ஐ-3)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 21 - 03 - 1913



ஆண்டவன் அடியில் 18 - 12 - 2000

## அமரர் முருகேசு கனகரட்ணம்

18-12-2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் முருகேசு கனகரட்ணம் அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உறவினர், அயலவர், நண்பர்கள் ஆகியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு -

இன்று (17-01-2001) புதன்கிழமை திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும்கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி - க.நாகம்மா.
மக்கள் - மருமக்கள்
தனலட்சுமி துரைராசா.
நித்தியானந்தன் பத்மாவதி.
இந்திராணி ஜெகநாதன்.
மனோரஞ்சிதம் ராஜா.
விஜயலட்சுமி ரவீந்திரன்.
தயாநிதி கிருபாலிங்கம்.

நிரந்தர முகவரி:-
*இல.32. திருமகள் வீதி,*
*அரியாலை.*

(82978)

# அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 07 - 01 - 1915



மறைவு 18 - 12 - 2000

## அமரர் தம்பிமுத்து தம்பிராசா

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.01.2001) புதன்கிழமை ஊரெழு பூரண வாசா இல்லத்தில் நடைபெற்று மோட்ச அர்ச்சனையும் பிரசாதம் வழங்கலும் நாளை (18.01.2001) வியாழக்கிழமை 11 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும்

இந்த அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்று கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன். அன்னாரின் இல்லத்திலிருந்து 18ஆம் திகதி 10 மணிக்கு ஆலயம் செல்வதற்கான போக்குவரத்து வசதி செய்யப் பட்டுள்ளது.

-மனைவி.

*"பூரண வாசா"*
*ஊரெழு கிழக்கு.*

(82849)

# கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.17

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மாவட்டத் தில் 8 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

அனுமதி அட்டைகள் யாவும் நாளை வியாழக்கிழமை கப்பலில் எடுத்துவரப்படவுள்ளமையால் பரீட் சார்த்திகள் தமது அனுமதி அட்டை களை வெள்ளிக்கிழமை யாழ்.கல்வி வலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

பரீட்சை நிலையங்கள் பற்றிய விவரங்கள் பின்பு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-10)

## தும்பளைவாசி ஓமானில் விபத்தில் பலி

ஓமான் நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில், தும்பளை யைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக மரணமானார்.

கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில், தும்பளை - கலட் டியைச் சேர்ந்த கு.சதாசிவம் (வயது57) என்பவரே பலியாகியுள் ளார்.

இவரது சடலம் ஓமானில் இருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள் ளது. (ஐ-109)


**I.B.S கல்வி நிறுவனம்**

**சுண்டிக்குளி**

**தரம் 5 முதல் O/L வரை**

*இம்மாதம் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.*
*பிரிவுகள் ஆரம்பம்:*
நாளை -18-01-2001 3.p.m.

தரமான ஆசிரியர்கள்
உயர்வான கல்வி

(82971)

SPOKEN ENGLISH WITH GRAMMAR

LECTURES BY:
**Mr.M.V.HARI**

புதிய பிரிவு ஆரம்பம்
*20.01.2001 சனி மாலை 2.00 மணி*

SATURDAY
SUNDAY } 2p.m-3p.m

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம்.

(82427)


## ஐந்து ஆண்டு காலம் சேவையாற்றிய

# பனை தென்னைவள ஊழியருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

ஐந்து வருட காலம் திருப்திக ரமான சேவையைப் பூர்த்தி செய்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை அவர்களது பதவியில் நிரந்தரமாக் கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கூட் டுறவு ஆணைக்குழுவினால் இது தொடர்பான சுற்றறிக்கை வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டு றவு உதவி ஆணையாளர்கள் மற் றும் பனை தென்னைவள அபிவி ருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் கடமையாற் றும் சீவல் தொழிலாளர்களின் சமூக, பொருளாதாரத்தை உயர்த்து வதற்காகவே இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சங்க உறுப்பினர்களின் பிள்ளை களில் பலர் பதவிகளுக்குரிய கல் வித்தகைமை இல்லாமலேயே நிய மனங்கள் செய்யப்பட்டுள்ளனர். எனி னும் அவர்களது நியமனங்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் உறுதிப்படுத்தப்படாமல் உள்ளது.

இவ்வாறு கல்வித்தகைமை இல்லாது நியமனம் செய்யப்பட்ட வர்கள் கடந்த ஐந்தாண்டு காலத் தில் சீரான முறையில் வேலைகள் செய்திருந்தால் அவர்களை பதவி யில் உறுதிப்படுத்தல் அவசிய மாகும்.

இவ்வாண்டில் எந்தவொரு புதிய உத்தியோகத்தர்களையும் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டு றவு ஆணைக்குழுவின் முன் அனு மதி பெற்ற பின்னரே நியமனம் செய்ய வேண்டும்.

முன் அனுமதி இன்றி செய்யப் படும் நியமனங்களுக்கான நட்டங் களுக்கு உரிய பணிப்பாளர் சபையே பொறுப்பேற்க வேண்டும்.

- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-86-17)

## 14 பேர் கைது

மலையகத்தில் தோட்ட இளைஞர் யுவதிகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங் குவதற்காக வந்தவர்கள் என்ற சந் தேகத்தில் 14 பேரை பண்டாரவ ளைப் பொலீஸார் கைது செய்துள் ளனர்.

அங்குள்ள பயணிகள் விடுதியில் அவர்கள் தங்கியிருந்த சமயமே கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் 9 பேர் பெண களாவர். (உ-36)

## காரைநகர்ப் பகுதியில்

# வரட்சியால் பெரும்போக நெற் செய்கை பாதிப்பு

காரைநகர் ஜன.17

பெரும் போக நெற் செய்கை யின் போது ஏற்பட்ட வரட்சி காரண மாக காரைநகர் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட நெற்செய்கை முற் றாக அழிவடையும் நிலையில் உள் ளது.

சுமார் ஆயிரத்து நூற்று இருபது ஏக்கர் நிலப்பரப்பில் இங்கு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஜனவரி மாதத்தில் நெல் அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்படும். ஆனால் இம்முறை இதுவரை நெற் பயிர்கள் கதிர்வராத நிலையில் காணப்படுவதுடன பெரும்பாலானவை கருகி அழிந்துள்ளன.

இதேவேளை தொல்புரம் கமநல கேந்திர நிலையம் காரைநகர் பகுதி யில் உள்ள விவசாய சம்மேளனங் கள் ஊடாக வரட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளின் விவரங்களை சேகரித்து வருகின்றது.

வரட்சி நிவாரணம் வழங்குவதற் காக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மதிப்பீட்டில் வரட்சியால் நெற் பயிர் அழிவடைந்த விவசாயிகள் இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் னர், தங்கள் பதிவுகளை மேற் கொள்ளுமாறு காரைநர்ப் பகுதியில் உள்ள விவசாய சம்மேளனங்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-73)

## இருவர் காயம்

மட்டக்களப்பு,ஜன.17

மட்டக்களப்பு - பொலன்னறுவ வீதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் ஒரு .சிறுமியும் இளம் பெண் ஒருவரும் காயமடைந் தனர். அவர்கள் பின்னர் மட்டக் களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டனர்.

பிள்ளையாரடியைச் சேர்ந்த தில்லைரத்தினம் லதா(வயது-23), கருணாகரன் அனித்தா(வயது11) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். (உ-3-21)

உ
ஓம் - முருகன் துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் தைத்திங்கள் 6ஆம் நாள் (19-01-2001) வெள்ளிக்கிழமை அனுஷ நட்சத்திரமும் சுபயோகமும் கூடிய காலை 8.13 மணி முதல் 8.31 மணி வரையுள்ள கும்பலக்கின சுப முகூர்த்தத்தில்

பளை - மாவிட்டபுரம்
யோகவனம் தம்பதிகளின்
ஏக புத்திரன்
திருநிறை செல்வன்
**துளசீதரன்** (லண்டன்)



சுன்னாகம்
யோகானந்தராஜா தம்பதிகளின்
ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**பிரியதர்ஷினி**

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு வெள்ளவத்தை **மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் கல்யாண மண்டபத்தில்** திருமணம் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிப்பதோடு மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு மனமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

**திருமதி யோகவனம் ஜீவகாருண்யமலர்**
**B-4, G-1,** மாளிகாவத்தை அரச தொடர் மாடி,
**H.R,** ஜோதிபால மாவத்தை, கொழும்பு -10
**522,A - Kingston Road,**
**Raynes Park,**
**London - SW20-8Dt, England.**

**திரு.திருமதி செ.யோகானந்தராஜா**
"லக்சுமி வாசா"
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
**B-4, G-1,** மாளிகாவத்தை அரச தொடர் மாடி,
**H.R,** ஜோதிபால மாவத்தை, கொழும்பு -10
**T.P: 434372.**

*(இருவீட்டார் அழைப்பு)*

(82949)

# வறுமை ஒழிப்புத் திட்டங்களில் பாரிய பின்னடைவு ஏற்படலாம்

## உலக வங்கி எச்சரிக்கை

கொழும்பு,ஜன.17

பாதுகாப்புச் செலவினம் அதிகரித்து வருவதால் இலங்கையின் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு பாரிய பின்னடைவு ஏற்படலாம் என உலக வங்கி எச்சரித்துள்ளது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள உலக வங்கி வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கும் பாதுகாப்புச் செலவினங்கள் குறைவடைவதற்கும் இது அவசியமகவுளளதாகக் குறிப்பிட்டுள்ளது.

திங்கட்கிழமை கொழும்பிலுள்ள உலக வங்கியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

இலங்கை ஊடகவியலாளர்களுடன் வீடியோ கலந்துரையாடலொன்றை மேற்கொண்ட உலக வங்கியின் தெற்காசியப் பகுதிக்கான சிரேஷ்ட பொருளியலாளர் சுவாமிநாதன் ஐயா இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அபிவிருத்திக்கும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் நல்லாட்சியின் முக்கியத்துவமும் அதிகார பரவலாக்கலின் அவசியமும் இந்தச் சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது மேலும் வலியுறுத்தப்பட்டதாவது:-

இலங்கையிலும் தென்னாசிய நாடுகள் சிலவற்றிலும் பாதுகாப்புச் செலவினம் மிகவேகமாக அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக மனித வள திட்டங்களை முதலிடுவதில் நெருக்கடி தோன்றியுள்ளது.

அதேபோன்று வெளிநாடுகளுக்கு கடன்களுக்காக செலுத்த வேண்டிய வட்டியின் அளவும் அதிகரிக்கின்றது. எனினும் கடந்த காலங்களில் இடப்பட்ட உறுதியான அத்திவாரங்களை வைத்துக் கொண்டு இந்த நாடுகள் சமாளித்துச் செல்கின்றன. அரசாங்க செலவுகளின் நிலைமை மிகவும் மோசமாக காணப்படுகின்றது. ஊழலும் திறமையின்மையும் அதிகமாகக் காணப்படுகின்றன.

அதேவேளை பொது நிர்வாகம் அதிகளவில் ஒரேஇடத்தை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றது.

வரிவிதிப்பு முறைகளிலும் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. அரசாங்க செலவுகளில் எவற்றிற்கு முதன்மையளிக்க வேண்டும் என்ற மறுபரிசீலனையும் அவசியமாகவுள்ளது.

தெற்காசிய நாடுகள் பலவற்றுக்கு அதிகார பரவாலாக்கம் மிக அவசியமாகவுள்ளது.

கிராமிய மட்டங்கள் வரை அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மத்திய அரசாங்கங்களால் நிதிச் செலவுகளை நெறிப்படுத்த முடியாது. அதேவேளை மிகச் சாதாரண அதிகாரப் பரவலாக்கல் மாத்திரம் போதுமானதல்ல.

நிதி விவகாரங்களை கையாள்வதற்கான அதிகாரம் பகிர்தளிக்கப்பட்ட வேண்டும் நிர்வாகம் என்பது வெறுமனே மத்திய அரசிற்குரிய விடயமல்ல. இந்த விடயத்தில் தெற்காசிய நாடுகள் தமது பிராந்தியத்திலிருந்தே நல்ல முன்னுதாரணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதிகாரங்கள் பகிர்தளிக்கப்படும் வேளை அதிகாரங்களை பொறுப்பேறபவர்கள் தமது செயல்களுக்காகப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாக மாற்ற வேண்டும். அதன மூலமே ஊழல்களைத் தவிர்க்க முடியும்.

தெற்காசியாவில் அபிவிருத்திக்கு நல்லாட்சி என்பதும் முக்கியமாக உள்ளது. நிர்வாக மட்டத்தில் காணப்படும் திறமையின்மை இதற்குத் தடையாக அமைந்து விடுகின்றது. நல்லாட்சியொன்று நிலவாத பட்சத்தில் எதனையும் சாதிக்க முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரை சமாதானம் என்பது மிக அவசியமான தேவையாகவுள்ளது. வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்கவும் பாதுகாப்புச் செலவினங்களைக குறைக்கவும் இது அவசியம்.

வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை குறைப்பதற்கும் இது தேவையாகவுள்ளது. இலங்கை தனது வரிவிதிப்பு முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)


உ

சிவமயம்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

**விசேட அறிவித்தல்**

**அனைத்துப் பொதுமக்களுக்கும் அன்பான வேண்டுகோள்!**

இலங்கை அரசாங்கத்தில் பதிவு பெற்றதும், இலங்கை ஜனநாயகக் குடியரசின் 1917ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நம்பிக்கைச் சொத்துக் கட்டளைச் சட்டத்தின் 99ஆம் பிரிவின் கருத்திற்கு உட்பட்டவாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுமான, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் எனும் பெயரில் உலகில் எந்த ஓர் இடத்திலும் ஆலயம் அமைத்துச் செயற்படுத்துவதற்கோ, நிதியோ அன்றிப் பொருள்களோ வசூல் செய்வதற்கோ, எந்த ஒரு தனி நபருக்கோ, தனி நபர்களுக்கோ அன்றி நிறுவனங்களுக்கோ மேற்படி சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர் சபையினால் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பதை இத்தால் சகல பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இதனை மீறி நடக்கும் தனி நபருக்கோ, நபர்களுக்கோ அன்றி நிறுவனங்களுக்கோ எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம். பிற நாடுகளிலோ அல்லது உள்நாட்டிலோ இவ்வாறான செயலில் ஈடுபடும் எவருக்கும் நிதி, பொருளுதவி அளிக்கவேண்டாம் என பொதுமக்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த 08.01.2001ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 10ஆம் பக்கத்தில் 82700 இலக்கமிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ள *சின்னக்குளத்தடி கந்தரோடை, சுன்னாகம் என்னும் முகவரியைக் கொண்ட தாயார் புனித நாகேஸ்வரி* என்பவரின் விளம்பரத்திற்கு, நயினை நாகபூஷணி அம்மன் ஆலய அறிவித்தல் என்ற சொற்பதம் தலைப்பாகப் பாவிக்கப்பட்டிருப்பது உண்மைக்குப்புறம்பான ஒன்றாகும். இவ்விளம்பரத்திற்கும், எமது ஆலயத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை தெளிவுபடுத்துவதோடு, நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் என்ற பெயரில் அவர்களின் முகவரியிடப்பட்டு வெளியிடப்படும் விளம்பரங்களும் நிதி வசூல் ரிக்கற்றுக்களும், போலியானவை என்பதையும் அவை அடியார்களை திசைதிருப்பும் தவறான நோக்கம் கொண்டவை என்பதையும் தெளிவுபடுத்துகின்றோம்.

இவ்விடயத்தில் எமது முறைப்பாட்டின் பிரகாரம், உடுவில் உதவி அரசாங்க அதிபர் அவர்கள், நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரைப் பயன்படுத்தி; தாயார் புனித நாகேஸ்வரி என்பவர் தவறான முறையில் நிதி திரட்டும் செயலைக் கண்டித்தும்; அவருக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை பற்றியும் எமக்கு அறிவித்துள்ளார். குறிப்பிட்ட பெயர்வழிகள் மீது நாம் ஆக்கபூர்வமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதைச் சுட்டிக் காட்டி, *இவ்வாறான பேர்வழிகளிடம், நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரால் இனிமேலும், ஏமாறாது இருக்கும் படி அன்பர்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.* நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் என்ற சொற்பதம் சுயம்புமூர்த்தமாக அம்பாள் எழுந்தருளி வீற்றிருக்கும் நயினாதீவு நாகபூஷணி அம்பிகையின் ஆலயத்தை மட்டுமே குறிக்கும் என்பதை அன்பர்கள் அனைவரும் கவனத்தில் கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(ஜ/14857)


## சுயதொழில் ஊக்குவிப்பு கருத்தரங்கு

காரைநகர்,ஜன.17

ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழகச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சுயதொழில் ஊக்குவிப்புக் கருததரங்கு கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை இளைஞர் கழகம் பிரதேச சம்மேளனத் தலைவர் ஞா.செந்தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் சி.சிவதட்சணாமூர்த்தி பிரதம விருந்தினராகவும், தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் சு.வேலாயுதபிள்ளை, யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் அ.சத்திவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (ஓ-73)

## கசிப்பு விற்றவருக்கு அபராதம்

சட்டவிரோதமான வகையில் தேநீர்க் கடை ஒன்றில் வைத்து கசிப்பு, அரச சாராயம் என்பவற்றை விற்ற ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில் பதில் கடமையில் ஈடுபட்டுவந்த பருத்தித்துறை மதுவரி உத்தியோகத்தர்கள் கொடிகாமம் - கச்சாய் வீதியில் உள்ள தேநீர்க் கடை ஒன்றை திடீர் பரிசோதனை செய்த சமயம் இந்த சட்டவிரோத மது விற்பனை கண்டுபிடிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவராசா என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த மதுவரி உத்தியோகத்தர்கள் இவரை கடந்த 11ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த சமயமே அவருக்கு குறித்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-109)

# பேச்சு குறித்த இறுதி நம்பிக்கை சொல்ஹெய்மின் கைகளிலேயே!

## சமாதானப் பேரவை கருத்து

கொழும்பு,ஜன.17

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு முடிவடைவதற்கு இன்னமும் ஒரு வாரகாலம் இருக்கின்ற நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த இறுதி நம்பிக்கை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் செயற்பாடுகளிலேயே தங்கியிருப்பதாக தேசிய சமாதானப் பேரவையின் இயக்குநரும் அரசியல் விமர்சகருமான கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலுள்ள பெரும்பான்மையானவர்கள் இராணுவத் தீர்வொன்றையே விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 24ஆம் திகதிக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதிலொன்று கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலாநிதி ஜெகான் பெரேரா திங்கட்கிழமை விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்புக்கு சாதகமான பதிலொன்றை அளிப்பதாக. இலங்கை அரசின் மேல் விடுக்கப்பட்ட அழுத்தங்கள் பலனற்றுப் போயுள்ளன.

தமிழ்க் கட்சிகளினது வேண்டுகோளுக்கோ அல்லது அரச சார்பற்ற அமைப்புகளின் சொல்லுக்கோ அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்க வேண்டுமென வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரியர்களும் நடத்தவுள்ள பேரணிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் யுத்த நிறுத்தத்துக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கும் ஆதரவு தெரிவிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் இந்தப் பேரணியின் பின்னணியில் விடுதலைப் புலிகள் உள்ளதாக கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை இராணுவம் பிறிதொரு திகதியை பேரணிக்கு ஒதுக்கித் தருவதாகத் தெரிவித்துள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இருப்பது தவிர்க்க முடியாதது. இதனைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் இருக்கப் போகின்றனர். யாழ்.பல்கலைக்கழக சமூகத்தைப் பொறுத்தவரை இது நிச்சயமாகக் காணப்படக் கூடியவொன்று. யுத்த நிறுத்தத்திற்குத் தயாராகவில்லை என்ற செய்தி கொழும்பில் வைத்து சொல்ஹெய்மிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இதனையே பகிரங்கமாக அறிவித்துள்ளது. திரைமறைவில் என்ன நடக்கிறது என்பது தெரியவரவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சியொன்றில் இது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறத்த அறிவிப்பு முடிவடைவதற்கு இன்னமும் ஒரு வாரகாலமே இருக்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான இறுதி நம்பிக்கைகள் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிலேயே தங்கியிருக்கின்றன.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளுக்குத் தயாராக இருக்கின்றது என்றான போதிலும் ஜனவரி 24இற்கு முன்னர் குறிப்படத்தக்கதாக எதுவும் நிகழப் போவதில்லை - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அரசு யுத்த நிறுத்தம் அறிவித்தபின் அனுமதி இன்றி வன்னி செல்வோம்

## படையினரின் பெற்றோர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.17

அரசாங்கமும் யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்கும் வரையே காத்திருக்கின்றோம். புலிகளை போல அரசும் யுத்தநிறுத்தத்தை அறிவித்தால் எவருடைய அனுமதியும் இன்றி நாம் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள எமது பிள்ளைகளைக் காணச் செல்வோம். பெற்றோர்கள் எந்த நிமிடமும் வன்னி செல்லத் தயாராகவே உள்ளனர் என்று காணாமல் போன படைவீரர்களின் பெற்றோர், உறவினர்களின சங்கத் தலைவர் சுபிநாணயக்கார தெரிவித்தார்.

இரு தரப்பினரும் யுத்தநிறுத் தம் செய்திருக்கையில் வன்னி செல்ல எவரின் அனுமதியும் தேவைப்படாது. புலிகள் ஏற்கனவே யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இந்நிலையில் அரசாங்கமும் யுத்தநிறுத்தத்தை அறிவிப்பதையே எதிர்பார்த்துள்ளோம்.

நோர்வே மத்தியஸ்தத்துடன் சமாதான முயற்சிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் விரைவில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். அதற்காக அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை கூடிய விரைவில் அறிவிக்கும் என ஆவலாக எதிர்பார்த்திருக்கிறோம்.

தமது பிள்ளைகளை காணச் செல்வதற்கு பெற்றோர் மிகவும் ஆவலாக உள்ளனர். அதற்கான சந்தர்ப்பம் சில தினங்களில் கிட்டும் என நம்புகிறோம் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட BAIRAHA FARM புறொயிலர் இறைச்சிக் கோழி CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 2868. (82929)

கொழும்பிலிருந்து தினமும் இறககுமதி செய்யப்படுகின்ற சுத்தம் செயயப்பட்ட வயீராபாம் புறொயிலர் இறைச்சி மற்றும் **KEELS** வகை சொசேஜஸ் என்பன குறைந்த விலையில் விற்பனையாகின்றன. இறைச்சி மொததமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை-**250/-** மொத்தமாகக கொள்முதல செய்வோருக்கு சலுகை உண்டு. தொடர்பு: **T.**தரன், ஆஸ்பத்திரி வீதி, (கஸ்தூரியார் வீதி சந்திக்கருகாமையில்) யாழ்ப்பாணம். (82980)

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: வி.குணபாகன், 343, **K.K.S.** றோட், யாழ்ப்பாணம், **T.P No.3353,** வி. குணபாகன், 609, **K.K.S.** றோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (83022)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள தட்டச்சு இயந்திரம் (தமிழ், ஆங்கிலம்), ஜெனரேற்றர் **(Honda 650W)** உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: து. சிறீதரன், **802/4**, பலாலி வீதி, திருநெல்வேலி. (82986)

நல்ல நிலையில் உள்ள யன்மார் ஜெனரேற்றர் **[15 H.P,7 1/2 KW]** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தவராசா (ராசன்), 13, கண்டி வீதி, பஸ்ரியன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (83008)

இறைச்சிக்கோழி சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (82987)

## யாழ்ப்பாணம்

இலக்கியக் கட்டுரைகள் விமர்சன நூலை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் ஏனைய நூல்கள்:- 1. யாழ்ப்பாணம்-சிறுகதைத் தொகுப்பு, 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல், 3.நாடகம் எழுதுவது எப்படி? 4.யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதஙகள். (83012)

## வீடு வாடகைக்கு

**74/1,** கலாசாலை வீதி, திருநெல்வேலியில்(ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து 200யார் தூரம்) வசதியான வீடொன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ச.சுதாகரன்,"நவ உதயம்" 203, கோயில் வீதி, நல்லூர். (83017)

## தவறிவிட்டது

பெறுமதி மிக்க கைக்கடிகாரம் ஒன்று நேற்று (16-01-2001) செவ்வாய்க் கிழமை நாவலர் வீதிக்கும் (மனோகராத் தியேட்டர் சந்திக்கும்) கஸ்தூரியார் வீதி ராஜா தியேட்டருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 107, கண்டிவீதி, கச்சேரியடி சுகாதாரப் பணிமனையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (83010)

தோப்புக்காடு காரைநகரைச் சேர்ந்த கந்தையா இராசையா என்பவருடைய தே.அ.அட்டை(இல.37345 2688**V**) 05-12-2000 அன்று மணியம் கட்டடப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **153/9,** நாவலர் வீதி, ஐந்து சந்தி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.(83009)

சந்தனராஜா மோகனராஜா என்பவருடைய தே.அ.அ. (இல.69365 2251**V**) யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் **C.C. T.M** பாடசாலை ஒழுங்கை, கொககு வில் மேற்கு என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (82995)

சித்தன்கேணியைச் சேர்ந்த சின்னத்துரை பிரதீபா என்பவருடைய விசேட அ.அ.(இல. 090404788) 13-01-2001 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பாரதி கல்வி நிலையம், சித்தன் கேணி என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும். **(C/14849)**

## மணமக்கள் தேவை

1974இல் பிறந்த இந்து மத சைவ போசன பட்டதாரி மணப்பெண்ணுக்கு சைவ போசனமுள்ள மணமகனும், 45 வயதுடைய **9000/-** சம்பளம் பெறும் கிறிஸ்தவ அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதுக்குட்பட்ட மணப்பெண்ணும்(ஆசிரியை விரும்பத்தக்கது) தேவை. தொடர்பு: சோமசுந்தரம், 122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி. (82888)

## தேவை

ரெலிகொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர், உரிமை மாற்றம் செய்து விற்கவிரும்பின் உடன் தொடர்பு கொள்க: விளம்பர இல.1177, மே/பா உதயன். (82976)

## சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம்

நவாலி,ஜன.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல 2 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் சண்டிலிப்பாய் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும்.(ம-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவற்கட்டு, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கௌரவ **கே.என். டக்ளஸ் தேவானந்தா** (வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் மொழி அலுவல்கள் விவகாரம் மற்றும் இந்து கலாசார அமைச்சர்) அவர்களை நேரில் சந்தித்து கேட்டுக் கொண்டதற்கிணங்க 100 வீட்டுத் திட்டத்துக்கு ஒன்றரை மில்லியனும், கடற்றொழில் உபகரணங்கள் விற்பனைக்கு ஒரு மில்லியனும், பாடசாலை உபகரணங்களுக்கு 0.25 மில்லியனும் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து மனமகிழ்ச்சியடைகிறோம்.

சாவற்கட்டு கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கமும்,
100 வீட்டுத் திட்டப் பயனாளிகளும்.

(83007)

## தென்மராட்சி மாணவர்களுக்கு!

தென்மராட்சி,ஜன.17

தர்மக்கேணி அ.த.க.பாடசாலையில் கல்வி பயின்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் சீருடைத்துணிகள், பாடநூல்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக நெல்லியடி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையில் இயங்கும் தர்மக்கேணி அ.த.க.பாடசாலையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பதிவு செய்யுமாறு அதிபர் திருமதி செ.ஜோ.பாலேந்திரா கேட்டுள்ளார். (ம-117)

* * *

தென்மராட்சி,ஜன.17

வரணி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் சீருடைத் துணிகள், பாடப் புத்தகங்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக மாணவர்கள் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் வரணி மகாவித்தியாலயத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அதிபர் ந.நவரத்தினராசா கேட்டுள்ளார். (ம-117)

* * *

சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் கல்வி கற்று, தற்போது வடமராட்சி, வலிகாமப் பகுதி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் பெயர் விவரங்களைப் பதியுமாறு அதிபர் கே.எம்.சாம்பசிவம் கேட்டுள்ளார்.

இலவச பாடநூல்கள், இலவச சீருடை என்பவற்றை வழங்குவதற்கு மேற்படி விவரங்கள் தேவைப்படுவதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

* * *

கிளாலி றோ.க.த.க. வித்தியாலயத்தில் கல்வி பயின்ற சகல மாணவர்களும் நாளையும் நாளை மறுதினமும் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் இயங்கும் கிளாலி றோ.க.த.க.வில் பெயர் விவரங்களைப் பதியுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

* * *

தனங்களப்பு அ.த.க. பாடசாலையில் கல்வி பயின்று வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களை நாளை வியாழக்கிழமைக்கு முன்பாக பெயர், பிறந்த திகதி, தரம், தற்பொழுது கற்கும் பாடசாலை போன்ற விவரங்களுடன் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் அல்லது குகன் வைத்தியசாலை பங்களாலேன், மல்லாகம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளும்படி அதிபர் செ. பேரின்பநாதன் கேட்டுள்ளார்.

இலவச பாடநூல், சீருடை விநியோகத்திற்காக இந்த விவரங்கள் வேண்டப்படுகின்றன. (ம-5-86)

* * *

தென்மராட்சி,ஜன.17

வரணி இயற்றாலை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்று இடம் பெயர்வினால் தற்பொழுது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சீருடைத் துணிகள், பாடப் புத்தகங்கள் ஆகியவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மாணவர்கள் தமது முழுப் பெயர், தற்போது தங்கி உள்ள முகவரி, தற்போது கல்வி பயிலும் பாடசாலை, கற்கும் வகுப்பு ஆகிய விவரங்களை துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலையில் நாளையும் நாளை மறுதினமும் பகல் 12.00 மணி வரை பதிவு செய்யலாம் எனவும், வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மாணவர்கள் தபால் மூலமும் அனுப்பி வைக்குமாறும் அதிபர் ஐ.குமாரசிங்கம் அறிவித்துள்ளார். (ம–117)

* * *

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்ற சகல மாணவர்களையும் முழுப்பெயர், பிறந்த திகதி, தரம், தற்போது கற்கும் பாடசாலை, தற்காலிக முகவரி போன்ற விவரங்களுடன் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் அல்லது இணுவில் ஆஸ்பத்திரி விடுதியில் நாளை வியாழக்கிழமை சந்திக்கும் படி அதிபர் க. அரியதாஸ் கேட்டுள்ளார். (ம-5-86)



கலாகேசரி ஆ. தம்பித்துரை பற்றிய ஆய்வு நூல் வெளியீடு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்றது.

சைவப்புலவர் சு.செல்லத்துரை மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். நூலாசிரியர் வே. அம்பிகைபாகன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் க.சிவகடாட்சம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ம)

## ஆறாம் மாத நினைவஞ்சலி



### அமரர் கந்தசாமி தர்மேசன்

(திட்டமிடல் உதவியாளர் - வலிகாமம் கல்விவலயம் மாவட்ட சாரண உதவியாணையாளர் - காங்கேயன் மாவட்டம்)

[படங்கள்: ஒருவரின் இரு பதவிகளின் தோற்றங்கள்]

பிறப்பு 1953-10-30 | இறப்பு 2000-07-18

பாசத்தின் உறைவிடமான எங்கள் அப்பாவே!
ஓருடல் ஈர்தொழிலாகச் சிறப்பாகச் சேவையாற்றியவரே!
ஞமலியின் வடிவிற் காலன் கவர்ந்து சென்று
ஆறு திங்களாகியும் எங்கள் கவலை ஆறவில்லை!
ஆண்டவன் தாள் சேர்ந்திருக்கத் துதி செய்து
அஞ்சலிக்கின்றோம்.

அன்பு மனைவி,
மூத்தரன்கள்.

*'தரன் இல்லம்'*
*தேவாலய வீதி,*
*மூளாய், சுழிபுரம்.*

(83006)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நெஞ்சம் சுமக்கும் நினைவலைகளும்

மலர்வு 1921 - 03 - 10



உதிர்வு 2000 - 12 - 17

### அமரர் சரவணமுத்து இரத்தினம்

அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்,
நல்வாழ்வு காட்டிய எம் அன்புத் தந்தையே!
மண்ணைவிட்டு நீர் மறைந்தாலும்
உம்மை என்றும் எம் உள்ளத்தில் மறவோம்!
உங்கள் ஆத்ம சாந்திக்காய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

*மஞ்சத்தடி,*
*இணுவில் தெற்கு.*

(C/14859)

# நில நடுக்கத்தில் பலியானோரைப் புதைக்க 3,000 பிரேதப் பெட்டிகள்!

## எல்சல்வடோர் அரசு வழங்குகிறது

மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடோரில் நிலநடுக்கத்தால் இறந்தவர்களைப் புதைப்பதற்கு3 ஆயிரம் பிரேதப் பெட்டிகளை அந்நாட்டு அரசு வழங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை எல்சல்வடோரில் நிலநடுக்கம் ஏற்பட்டது. 7 ரிக்டேருக்கும் அதிக அளவான இந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட பாரிய நிலச்சரிவினால் ஆயிரக் கணக்கான வீடுகள் மண்ணில் புதைந்தன. இதனால் அங்கு வசித்தவர்கள் குடும்பத்தோடு இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கத்தால் இதுவரை 400 பேர் இறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் பலியானோர் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இறந்தவர்களைப் புதைப்பதற்காக 3 ஆயிரம் பிரேதப் பெட்டிகள் வழங்கப்படும் என்று அதிபர் பிரான்ஸிஸ்கோ புளோரஸ் அறிவித்திருப்பது இதனை உறுதி செய்கிறது.

நில நடுக்கத்தின் தாக்கம் பக்கத்து நாடுகளிலும் உணரப்பட்டது.

மண் சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அமெரிக்கா மெக்ஸிகோ மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் எல்சல்வடோருக்கு நிவாரண உதவிகளை அனுப்பியுள்ளன.

(ஒ-6)

# 50 வருடங்களில் இல்லாத அளவு கடுங்குளிர் சைபீரியாவில்!

மொஸ்கோ, ஜன .17

ரஷ்யாவின் சைபீரியப் பிரதேசத்தில் கடந்த அரை நூற்றாண்டில் இல்லாத அளவுக்குக் கடுங் குளிர் நிலவி வருகின்றது.

இதுவரை குளிருக்கு 23 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 40 பேருக்குக் கை அல்லது கால் விறைத்ததால் அந்த உறுப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

நூற்றுக்கணக்கானோர் குளிர் காரணமாக ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சைபீரியாவில் தற்போது மைனஸ் 50 பாகை செல்சியல் குளிர்நிலை நிலவுகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஹிட்லரின் நாஜிப் படைகள் சைபீரியாவிற்குள் நுழைந்தபோது அங்கு நிலவிய குளிரினால் மோசமாகப் பாதிப்படைந்ததாலேயே போரில் ஹிட்லர் தோல்வியடைந்ததாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

# எதிர்க்கட்சிகளுடன் பேசுவதால் சீனாவுக்கு எந்தப் பயனும் இல்லை

## தாய்வான் பிரதமரின் ஆலோசகர் தெரிவிப்பு

தாய்பேய், ஜன. 17

எதிர்க்கட்சிகளுடன் பேசுவதை விடுத்து ஆட்சியில் இருக்கும் அரசுடன் பேசுவதே சீனாவுக்கு நன்மை அளிக்கும் என்று தாய்வான் அதிபரின் பிரத்தியேக ஆலோசகர் லீ, வென்சே தெரிவித்துள்ளார்.

தாய்வான் — சீனா உறவுகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சீனா தாய்வான் வர்த்தகர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்குமே ஆதரவளித்து வருகின்றது. நாட்டின் அதிபருக்கோ, சுதந்திர நாட்டம் கொண்ட ஜனநாயக முன்னேற்றக் கட்சிக்கோ மதிப்புத் தந்ததாகத் தெரியவில்லை.

தாய்வானுடனான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்றால் தாய்வான் ஆட்சியாளர்களுடன் பேச வேண்டுமேயல்லாது எதிர்க்கட்சிகளுடன் பேசுவதால் எந்தப் பயனும் சீனாவுக்குக் கிடைக்கப் போவதில்லை. என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

[ம-6]

# இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுகார்டோவின் இளைய மகன் பதுங்கு குழியில் மறைந்துள்ளார்?

ஜகார்த்தா, ஜன. 17

இந்தோனேசியாவில் நில பேர ஊழல் வழக்குத் தொடர்பாக விதிக்கப்பட்ட தண்டனையில் இருந்து தப்பி தலைமறைவாகியுள்ள முன்னாள் அதிபரின் மகனைப் பிடிக்க அவர் மறைந்துள்ள பதுங்கு குழியைத் தோண்டும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் அதிபர் சுகார்ட்டோவின் இளைய மகன் ரொனி சுகார்ட்டோ இவர் தனது தந்தை இந்தோனேசியாவில் அதிபராக இருந்த சமயத்தில், அரச நிலங்களை விற்பதில் ஊழல் புரிந்த குற்றத்துக்காக 13 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்டதும் ரொனி தலைமறைவானார்.

தற்போது அவரது வீட்டின் அடியில் உள்ள பதுங்கு குழியில் ரொனி மறைந்து வாழ்வதாகப் பொலீஸார் சந்தேகித்தனர்.

கடந்த சனி அன்று பதுங்கு குழியை கண்டுபிடிக்கும் பணியில் பொலீஸார் ஈடுபட்ட போதும் அது தோல்வியில் முடிவடைந்தது.

இதனை அடுத்தே இயந்திரங்கள் மூலம் நிலத்தைத் தோண்டி பதுங்கு குழியைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (ஒ-6)

## உலக அரங்கில்

# முன்னாள் போராளிக்கு வெற்றி வாய்ப்பு

உகண்டாவில் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் முன்னாள் போராளியான பிசா டெவுஜே வெற்றி பெறுவார் என்று கருதப்படுகிறது.

எண்பதுகளில் இடி ஆமீனின் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் டெவுஜே தீவிரமாக ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அப்பாவிகளைக் கடுமையாகத் தாக்கியதற்காக வீரப்பனைத் தேடும் பொலீஸார் கிராம மக்களால் சிறைப்பிடிப்பு!

ஈரோடு, ஜன. 17

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள அதிரடிப் படையினரில் 10 பேர் கிராம மக்களால் சிறை வைக்கப்பட்டனர்.

தமிழக, கர்நாடக மாநிலங்களின் சிறப்புக் காவல் படையினரும் எல்லைப் பாதுகாப்புப் படையினரும் இணைந்து வீரப்பனையும் அவனது கூட்டத்தையும் தேடிப்பிடிக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

வீரப்பனுக்கு உதவி செய்வதாகக் கருதும் அப்பாவி மக்களை படையினர் துன்புறுத்தி வருவதாக முறைப்பாடுகள் எழுந்திருந்தன.

சமீபத்தில், தமிழகத்தின் ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டம் கிராமத்தில் வசிக்கும் கதிரவேல் என்பவரை அதிகாரி உட்பட 10 படைவீரர்கள் தேடிச் சென்றனர்.

அவர்கள் அக்கிராமத்தில் அத்துமீறிய செயல்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் ஆத்திரமுற்ற கிராம மக்கள் 10 வீரர்களையும் சுற்றி வளைத்துத் தாக்கி ஆயுதங்களைப் பறித்தெடுத்ததுடன் அவர்களை ஒரு கட்டடத்துக்குள் சிறை வைத்தனர்.

தகவல் தெரிந்து வெள்ளோட்டம் கிராமத்துக்கு விரைந்து சென்ற 100 வீரர்களைக் கொண்ட படையணி தமது சகாக்களை மீட்டதுடன் கதிரவேலுவையும் கைது செய்தனர்.

அப்போது கிராம மக்கள் அத்துமீறித் தாக்கப்பட்டதாகவும் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கோரி ஈரோட்டின் முக்கிய சாலையில் நேற்று மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

90 களில் வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ் படையினரால் காட்டுக் கிராமங்களில் வாழும் பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும்—

கிராம மக்களின் கால்நடைகள் பொலீஸாரின் உணவுக்காக பறிக்கப்பட்டதாகவும் முறைப்பாடுகள் எழுந்தது குறிப்பிடத்தக்கவை. (ஒ—6)

# எதிர்ப்பு ஏவுகணைத் தயாரிப்பை அமெரிக்க அரசு கைவிடாது!

## புதிய பாதுகாப்பு அமைச்சர் உறுதி

வாஷிங்டன், ஜன. 17

தேசிய பாதுகாப்புக்காக ஏவுகணை எதிர்ப்பு பாதுகாப்புக் கருவிகளான 'பலஸ்டிக்' ரக ஏவுகணைகளைத் தயாரிப்பதை அமெரிக்காவின் புதிய அரசு தொடர உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஏவுகணைகளுக்கும் பேரழிவினை உண்டாக்கும் ஆயுதங்களுக்கும் எதிராக மிரட்டல் தற்காப்பு என்ற உத்தியைப் பின்பற்ற வேண்டும்'—என்று அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுள்ள டொனல்ட் ரும்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சர் பதவி நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கான அமெரிக்க செனட்டில் முப்படைகளின் ஆணைக்குழு விசாரணை நடைபெற்றது. அதில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டம் குறித்து அதனை எதிர்க்கும் நேச நாடுகளுடனும் ரஷ்யாவுடனும் அமெரிக்கா விவாதிக்கும் என்றார்.

விலகும் அதிபர் கிளின்ரனின் ஆட்சிக் காலத்திலேயே இந்த ஏவுகணை எதிர்ப்பு 'பலஸ்டிக்' ஏவுகணைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஏகணைத் திட்டம் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான ஏவுகணை ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று அமெரிக்காவும்—

இந்தத் திட்டம் பிராந்தியத்தில் அமெரிக்காவின் இராணுவ வல்லமையை அதிகரிக்கச் செய்யும் என்று ஐரோப்பிய நாடுகளும்—

கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளன.

இந்த எதிர்ப்புக்களையும் மீறி அமெரிக்கா ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை ஒன்றை பரீட்சார்த்தமாக ஏவியது. எனினும் அது தனது குறித்த இலக்கைத்தாக்கவில்லை என்றும்—

திட்டம்தோல்வியடைந்துள்ளது என்றும்—அறிவிக்கப்பட்டது.

தற்போது புதிய அதிபராகப் பொறுப்பேற்க உள்ள ஜோர்ஜ்புஷ்ஷின் அரசாங்கம் இந்தத் திட்டத்தை மீண்டும் புதுப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் வெற்றியளித்து ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகளை அமெரிக்கா உருவாக்கினால் அது அந்தப் பிராந்தியத்தில் உள்ள இராணுவச் சமநிலைக்கு அச்சுறுத்தலாக அமையும் என ரஷ்யாவும் ஏனைய வல்லரசுகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

(ம)

# ஐவரிக் கோஸ்ட்டில் நடந்த புரட்சி முயற்சி முறியடிப்பு!

அபிஜான், ஜன. 17

மேற்காபிரிக்க நாடான ஐவரிக் கோஸ்ட்டில் அரசு விரோதக் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட சதிப் புரட்சி முறியடிக்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

தலைநகரில் உள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்களை ஆயுதம் தாங்கிய குழுவினர் வசப்படுத்தியதாகவும்.

பின்னர் அக் கலகக்காரர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதாகவும் — கூறப்படுகிறது.

புரட்சிக்கான முயற்சி இடம்பெற்ற போது ஜனாதிபதி கிபாகுபோ, அவரது சொந்த ஊரான மமாவில் இருந்ததாக கூறியுள்ள அரசாங்கப் பேச்சாளர் இந்தப் புரட்சிக்கு பின்னணியில் இருந்த நாடுகளுடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டிக்கப் போவதாகவும் தெரிவித்தார். (ஒ)

# இலங்கை அணியுடன் ஆடியபோது பிரபாகர் லஞ்சம் தந்தார்

## கபில்தேவ் வாக்குமூலம்

புதுடில்லி, ஜன. 17

இலங்கை அணியுடனான ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டித் தொடரில் திறமையை வெளிக்காட்டாமல் இருப்பதற்காக மனோஜ் பிரபாகர் தனக்குப் பணம் தந்ததாக இந்தியக்கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் ஒழிப்பு ஆணையாளர் மாதவனிடம் கபில்தேவ் அளித்த 15 பக்க வாக்குமூலத்திலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர் மனோஜ் பிரபாகர் சுமத்திய குற்றச்சாட்டுகள் குறித்து தான் முன்னர் அளித்த வாக்கு மூலத்தில் கபில்தேவ் சில திருத்தங்களைச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# தமிழக சட்டசபைத் தேர்தல்

புதுடில்லி, ஜன. 17

தமிழகம், ஆந்திரா, கேரளா கர்நடகா, ஆகிய மாநிலங்களிலும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் எதிர்வரும் மே மாதம் ஒரே சமயத்தில் சட்டசபைத் தேர்தல்களை நடத்தவுள்ளதாக இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஒரு மாநிலத்தின் தேர்தல் முடிவு மற்றொரு தேர்தல் முடிவில் தாக்கத்தை ஏற்படுத்தாமலிருக்கவே 5 சட்டசபைத் தேர்தல்களையும் ஒன்றாக நடத்த உள்ளதாக ஆணையம் கூறியது. (ஒ)

## தவறவிடப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் காங்கேசன் துறையை வந்தடைந்த 'லங்கா முடித்த' கப்பலில் ஏற்றுமதி வரப் பட்ட 31 ஆம் நாள் நினைவஞ்சலி குறித்த சுலண்டர்கள் அடங்கிய ''காட்போட் பெட்டி'' பொதி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு நடைபெற உள்ளதால் இதனை தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் இதனை பின் வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

திருமதி க. புஸ்பராணி
பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி கிழக்கு.

(சி/14869)

---

வட்டு. மத்திய கல்லூரி பவளவிழா

## நிறுவுநர் நினைவுப் பேருரை

''புதிய நூற்றாண்டில் இந்து சமய நிறுவனங்கள்''

நிகழ்த்துபவர்:-
ஆறு. திருமுருகன் அவர்கள்

காலம்:- 19 - 01 - 2001 வெள்ளிக்கிழமை
பி.ப. 2.30 மணி

இடம்:- கல்லூரி மண்டபம்

அனைவரும் வருக!

- பவளவிழாச் சபை

(சி/14863)

---

## கண்ணீர்க் காணிக்கை

எமது பீட முதலாம் ஆண்டு சகோதர மாணவன்
பொ. சிவரூபன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### க. பொன்னுத்துரை

16 - 1 - 2001 அன்று சிவபதம் அடைந்து விட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக் கையாக்குகிறோம்.

பீட மாணவர் ஒன்றியம்,
பிரயோக விஞ்ஞான பீடம்,
வவுனியா வளாகம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(சி/14865)

---

## உரிமை கோரப்படாத மாடுகள்

புத்தூர் கமநல கேந்திர அதிகார பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு உரிமை கோரப் படாமல் உள்ளன.

இம் மாடுகளில் அனேகமானவை தென்மராட்சி பிரதேச மட்டுவில் மற்றும் சரசாலை பகுதிகளை சேர்ந்தவை என தெரிய வருவதால், அப்பகுதியினை சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் முன்னிலையில் தகுந்த ஆதாரங்களுடன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட வுள்ளன. மாடுகளை தவறவிட்ட உரிமையாளர் கள் நேரில் சமுகமளித்து மாடுகளைப் பெற்றுக்கொள் ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய திகதி;
20-01-2001 சனிக்கிழமை

இடம்: கிராம அலுவலர் அலுவலகம் புத்தூர் கிழக்கு குமரகுருபரன் ச. ச. நிலையம்.

நேரம்: காலை 10-00 மணி (புதிய)

பெரும்பாக உத்தியோகத்தர்
(83040) கமநல கேந்திர நிலையம், புத்தூர்.

---

## விசேட பொதுக்கூட்டம்

சாவகச்சேரி வணிகர் மன்ற அங்கத்தவர்களுக் கான விசேட பொதுக்கூட்டம், எதிர்வரும் 21-01-2001 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9-30 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் (மன்றின் செயலகத்திற்கு அருகில்) நடைபெறும்.

மன்றின் அங்கத்தவர்கள் மட்டும் தவறாது சமு கம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

முக்கிய குறிப்பு:- வருடாந்தப் பொதுக் கூட்டம் பற்றியும் அடுத்த நிகழ்விற்கான மன்றின் அங்கத்த வர்களின் அபிப்பிராயங்களையும் அறிவதற்காக விசேட பொதுக்கூட்டமுமாகும்.

வ. இராசதுரை
செயலாளர்

சாவகச்சேரி கைத்தொழில்
(சி/14868) வணிகர் மன்றம்

---

## 'டெங்கு' இங்கு பரவுகிறது!

டெங்கு காய்ச்சலின் தாக்கம் யாழ். குடாநாட்டில் படிப்படியாக அதிகரித்துக் கொண்டிருப்பதாகவே யாழ் போதனாவைத்தியசாலைப் பதிவேடுகளிற் தெரியவருகிறது.

கடந்த 14ஆம் திகதியும் டெங்குக்காய்ச்சலுக்கான அறிகுறியுடன் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பிரான்ஸிஸ் சேவியர் பிரதீபன் (வயது 19) என்பவரே டெங்குகாய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டவராவார்.

இவருடன் இதுவரை 21 பேர் டெங்குக் காய்ச்சலுக் கான அறிகுறிகளுடன் அனு மதிக்கப்பட்டு சிகிச்சைக் குட் படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களின் இரத்த மாதிரிகள்டெங்குக்காய்ச்சலுக்கான பரிசோதனைக்காக கொழும் புக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன. இவற்றில் இருவரின் பரிசோதனை அறிக்கைகள் மாத்திரம் டெங்கு காய்ச்சல் என உறுதிப்படுத்தப்பட்டு இங்கு அனுப்பப்பட்டுள்ளன.

## கணித, விஞ்ஞான விடைத்தாள்கள் திருத்தப்படுகின்றன

அச்சுவேலி, ஜன. 17

ஜி. சி. ஈ (சாதாரணதர) கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான விடைத் தாள்கள் திருத்தும் பணி தொடர்ந்து வேம்படி மக ளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

ஏனைய பாடங்களுக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணி கடந்த 13 ஆம் திகதி யுடன் முடிவடைந்தது. 67 குழுக்கள் இந்த விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட் டிருந்தன. ஒவ்வொரு குழுவி லும் 12 முதல் 14-க்கும் இடைப்பட்ட ஆசிரியர்கள் பணி புரிந்தனர்.

கணித, விஞ்ஞான பாடங் களுக்கான விடைத்தாள்கள் கணிதம் I, கணிதம் II, விஞ் ஞானம் I, விஞ்ஞானம் II என இருப்பதால் அவற்றைத் திருத்தும் பணி தொடர்ந்து இடம்பெறுகிறது. (ம-11)

## ஓடு பிரித்து தங்க நகை திருட்டு

வீட்டிலுள்ள வயோதிபர் உறங்கிய வேளை, அங்கு ஓடு பிரித்து உட்புகுந்த திருடர் கள் அலுமாரியிலிருந்த 75 பவுண் தங்க நகைகளையும், 50 ஆயிரம் ரூபா பணத்தை யும் திருடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகர திருட்டுச் சம்ப வம் நேற்று முன்தினம் இரவு புலோலியில் உள்ள சிங்கை நகரில், க. மாணிக்கம் என் பவரது வீட்டில் இடம்பெற் றது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் புகாரி டப்பட்டுள்ளது. [ம-10[

## இலவச கண் பரிசோதனை முகாம்

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை நடத்தும் மாதாந்த இலவச கண் பரி சோதனையின் நான்காவது முகாம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு வைத் தியசாலையில் நடைபெறும்.

கடந்த நவம்பர், டிசெம் பர் மாதங்களில் இடம் பெற்ற கண் பரிசோதனை முகாம்களில் தெரிவு செய் யப்பட்டவர்களுக்கான மூக் குக் கண்ணாடிகள் எதிர் வரும் 28 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை வழங்கப்பட உள் ளன. (ம-173)

---

### உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம்

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இலக்கம்: 0523

2 ஆம் பரிசு இலக்கம்: 2725

3 ஆம் பரிசு இலக்கம்: 1089

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:
1085, 2086, 0279,
0552, 2575.

பரிசுக்குரியவர்கள் 01 - 02 - 2001 ஆம் திகதிக்கு முன்உடுவில் டச் வீதியில் உள்ள நியூரட்ணம் ஸ்ரோசில் ஆதாரம் காட்டி தமது பரிசினை பெற்றுக்கொள்ள லாம்.

வி. வி. தினேஸ்
(சி/14864) செயலாளர்

---

## கண்ணீர் அஞ்சலி

### பிரம்மஸ்ரீ சாம்பசிவ சர்மா இந்திர சர்மா

எமது ஆலய பூசகர் நேற்று (16 - 01 - 2001) காலை உசனில் ஏறிகணை வீச்சினால் அகால மரணமடைந் ததையிட்டு அன்னாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின் றோம்.

பரிபாலன சபை
அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயம்.

டச்சு வீதி,
சாவகச்சேரி. (சி/14867)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது வளாகத்தின் முதலாம் வருட பிரயோக விஞ்ஞான பீட மாணவனாகிய
பொ. சிவரூபனின்
பாசமிகு தந்தையாரான
காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட

### கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

முதலாம் வருடம்
பிரயோக விஞ்ஞான பீடம்,
வவுனியா வளாகம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(14802)

---

## மரண அறிவித்தல்

### V. M. செல்லத்துரை

(கிருஷ்ணா அன் கோ உரிமையாளர், கொழும்பு)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வி. மாணிக்கம் செல்லத் துரை (13-01-2001) சனிக்கிழமை காலமானார்.

இவர் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் தரும ராசா (அராலி), செந்தமிழ் செல்வி (ஓமான்), தங்க ராசா (பூமகள் -யாழ்ப்பாணம்), செந்தாமரைச்செல்வி (அராலி), செல்வச் செல்வி (கனடா), தனராசா (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரி, ரவீந்திரன், ரஜனி, நிர்மலதேவன், சிவானந் தன், வானதி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிர திபா, பார்த்திபன், ஜெயதிபன், திவ்வியா, பானு கோபன், அகிலன், சிந்துஜா, விதுஷன், விதுரன ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற V.M. நமசிவா யத்தின் (பூமகள் வாசம் ஸ்ரோஸ், கொழும்பு) சகோ தரரும் கனகம்மாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரத்ன மலர்ச்சாலை யில் வைக்கப்பட்டு இன்று [17-01-2001] புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு – இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் 4.00 மணிக்குத் தகனக்கிரி யைகள் கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. தங்கராசா
(மகன்)
(பூமகள் ஹாட்வெயர்,
யாழ்ப்பாணம்)

22, யம்பற்றா வீதி,
கொழும்பு-13.
T.P. 332530

(83044)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

காரைநகர் களபூமி வளுப்வோடையை பிறப்பிடமாகவும் ஐயனார் கோவிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை பொன்னுத்துரை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் முருகேசு -சுந்தரம்மாவின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஐயனார் கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(83046)

தகவல்:
மனைவி

## சாம்பசிவசர்மா இந்திரசர்மா

சப்பச்சி மாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த சாம்பசிவ சர்மா இந்திர சர்மா நேற்று (16.01.2001) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார். அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவ சர்மா - வாலாம்பிகையின் அன்பு மகனும் சத்தியோஜாத சர்மா, மங்களாம்பிகை, கேதீஸ்வரி ஆகியோரின் சகோதரரும் சசிதேவி, வசந்த சர்மா, சிவமோகன சர்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2001) புதன்கிழமை 10.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

*நிரந்தர முகவரி:*
*சப்பச்சி மாவடி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
S.காந்தன்
(மைத்துனர்)

*தற்போதைய முகவரி:*
*கலட்டி அம்மன் கோயிலடி*
*வண்ணார் பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(83043)

## நினைவுப் பேருரை

சண்டிலிப்பாய்,ஜன.17

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி பவளவிழாவின் ஒரு அங்கமாக கல்லூரியின் ஸ்தாபகர் அமரர் எம்.எஸ்.இராசரத்தினம் நினைவுப் பேருரை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் வி.சிவஞானபோதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'புதிய நூற்றாண்டில் இந்துசமய நிறுவனங்கள்' என்ற தலைப்பில் 'செஞ்சொற்செல்வர்' ஆசிரியர் ஆறுதிருமுருகன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். தொடக்கவுரையை ஓய்வு பெற்ற உப அதிபர் 'சைவமணி' சி.மருதப்பிள்ளை வழங்குவார். (ஐ-135)

## விசமிகள் அட்டகாசம்

கொக்குவில்,ஜன.17

உரும்பிராய் பகுதியில் விசமிகள் சிலரின் அட்டகாசத்தினால் அடிக்கடி மின் விநியோகம் தடைப்படுகிறது.

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் செல்லும் வீதியோர மின்கம்பிகளில் சைக்கிள் செயின் மற்றும், கற்கள் கட்டப்பட்ட கம்பிகள் ஆகியவற்றை வீசுவதால் இப்பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரம் தடைப்படும் வேளைகளில் சிறுசிறு திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(ம-69)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா இளையதம்பி

மூளாய் தெற்கைச் சேர்ந்த செல்லப்பா இளையதம்பி நேற்று (16-01-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் கமலாம்பிகை (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கைலைவாசன் (ஆசிரியர், விக்டோரியாக் கல்லூரி சுழிபுரம்), லோகாம்பிகை (ஆசிரியை, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வே.ஸ்ரீதரன் (ஆங்கில ஆசிரிய ஆலோசகர், சாவகச்சேரி), ஸ்ரீகாந்தன் (ஆசிரியர், நாவலர் வித்தியாலயம், கோப்பாய்), ஞானசக்தி (ஆசிரிய மாணவி, பலாலி ஆசிரிய கலாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரம்யா, கிரீடி, சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (16-01-2001) செவ்வாய்க்கிழமை மூளாயில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மூளாய் மேற்கு,*
*சுழிபுரம்.*

(C/14870)

தகவல்:
இ.கைலைவாசன்
(மகன்)

## மாணிக்கம் பொன்னுத்துரை

கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும், கொண்ட மாணிக்கம் பொன்னுத்துரை 13-01-2001 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-01-2001) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

(C/14871)

தகவல்:
க.இராசதுரை
(மருமகன்- சிறுப்பிட்டி)


# லண்டனில் உயர்கல்வி

## B.Sc.(Computer Science)

எமது நிறுவனம் **University Of Guildhall London** உடன் இணைந்து **B.Sc. (Computer Science)** பட்டப்படிப்பு கற்கைநெறிகளை ஆரம்பித்துள்ளது.

இக்கற்கை நெறியானது மூன்று வருடங்களைக் கொண்டது. முதலாவது வருடம் எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் ஆரம்பக் கற்கை நெறியினைப் பூர்த்திசெய்வதன் மூலம் தாங்கள் **University Of Guildhall** இற்கு தெரிவு செய்யப்படுவீர்கள். தங்களிற்கான அனுமதிகள், தங்குமிடவசதிகள் யாவும் பல்கலைக்கழகத்துடன் இணைந்து எமது நிறுவனத்தினால் ஏற்பாடு செய்து தரப்படும்.

*கல்வித் தகைமைகள்:*

1. G.C.E.(A/L) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.அல்லது
2. G.C.E.(O/L) சித்தியுடன் Diploma in Computer Science ஏதாவது ஓர் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனத்தில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
3. ஆங்கிலம் விசேட சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது எமது நிறுவனத்தால் நடத்தப்படும் ஆங்கிலக் கற்கை நெறிகளில் கட்டாயம் பயின்று குறித்த ஒரு வருடத்துக்குள் பல்கலைக்கழகத்துடன் இணைந்து எம்மால் நடத்தப்படும் ஆங்கிலப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

*வயது எல்லை:*

18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

அனுமதிகள் பெற்றுக்கொள்வதற்கு எமது நிறுவனத்தின் யாழ்., வடமராட்சிக் கிளைகளில் உடனடியாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம் 17,18,19ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிப்பதன் மூலம் தகுதியானவர்கள் ஆரம்பக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

*நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:*

1. G.C.E.(O/L),G.C.E.(A/L) சான்றிதழ்கள்
2. கணனிக் கற்கை நெறியில் ஏற்கனவே ஏதாவது சான்றிதழ் பெறப்பட்டிருப்பின் அச்சான்றிதழ்.
3. பிறப்புச் சான்றிதழ்.
4. தேசிய அடையாள அட்டை.
5. ஏதாவது தொழில் புரிந்தால் குறித்த நிறுவனத்தால் தங்களின் சேவையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

*குறிப்பு:*

மேற்படி ஆவணங்கள் யாவும் 2 புகைப் படங்களுடன் எமது கிளைப் பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் கற்கை நெறிக்குத் தெரிவானவர்கள் 4 கலர் புகைப்படப் பிரதிகளை (Visa Size Color Photo) கற்கை நெறி ஆரம்பிக்கப்படும் போது ஒப்படைக்க வேண்டும்.

மேலதிக விவரங்கள் நேர்முகப் பரீட்சையின் போது வழங்கப்படும்.

**DCS COLLEGE OF COMPUTER TECHNOLOGY**

**NO. 124/2, PALALY ROAD,**
**THIRUNELVELY,**
**JAFFNA.**

**N.M.M.V. ROAD,**
**NELLIYADI,**
**KARAVEDDY.**

(C/14272)

# பல்கலைக்கழகச் சுற்றாடலில் தொடர்ந்தும் பொலீஸ் கெடுபிடி!

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில நேற்றும் பெருமளவு பொலீஸார குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள சந்திகள் மற்றும் வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த பொலீஸார் அந்த இடங்களினால் சென்ற பொதுமக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், விரிவுரையாளர்கள் அனைவரையும் சோதனை செய்தனர்

பல்கலைக்கழகம் முன்பாகவுள்ள இராமநாதன் வீதியால் சென்றவர்கள் அனைவரும் அடையாள அட்டைகள் பார்வையிடப்பட்ட பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொள்வதைத் தடுக்கும் நோக்குடனேயே இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது

(உ-5-10-15-86-133-173-185-)

# சந்திரசேகரன் கண்டனம்

தமிழ் மக்கள் தமது கருத்துக்களை ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்த யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளை அடக்க முயல்வது நியாயமற்றது என்று மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெசந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக சமூகம் நடத்தும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை வழங்கத் தயாராகவுள்ளதாகக் கூறும் அரசாங்கம் அம்மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாகப் பேசுவதற்கே தடைவிதித்திருப்பதன் மூலம் தனது சுயரூபத்தை வெளிபபடுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் தமது கருத்துக்களை ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளை அடக்க முயல்வது நியாயமற்றது.

தமிழ் மக்களின் உரிமைக் குரலை ஆயுதமுனையால் நசுக்கியதன் பின் விளைவுகளையே இலங்கை இன்று அனுபவித்து வருவதை வரலாறு உணர்த்துகின்றது.

இந்த நிலை தொடருமேயானால் மனிதாபிமானமுள்ள சிந்தனையாளர் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் அதிருப்தியையே சம்பாதிக்க நேரிடும் - என்றுள்ளது(உ-6)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமினி நாணயக்காரவுக்கு 'உதயன்' ஆசிரிய பீட உயரதிகாரி ஒருவரால் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

யாழ்பொலீஸ் தலைமையக இன்ஸ பெக்டருடன் தொடர்பு கொண்டு அவருக்குத் தெரிவித்துவிட்டு படம் எடுக்கும்படியும், அது குறித்து தலைமையக இன்ஸ்பெக்டருக்கு தாம் அறிவுறுத்துவதாகவும் பிரதிப்பொலீஸ்மா அதிபர் உதயன் ஆசிரியபீட அலுவலருக்கு பதிலளித்தார்.

காலை 9மணிமுதல் யாழ். பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தலைமையக இன்ஸ்பெக்டருடன் பேசுவதற்கு உதயன் ஆசிரியபீடத்திலிருந்து முயற்சி எடுக்கப்பட்டது.

அவர் பல்கலைக்கழகப் பகுதிக்குச் சென்றிருப்பதாக மீண்டும் மீண்டும் பதிலளிக்கப்பட்டது. அதனையடுத்து படப்பிடிப்பாளருடன் உதயன ஆசிரிய பீடத்தின் தலைமைச் செய்தியாளர் பல்கலைக்கழகச் சுற்றாடலுக்குச் சென்று அங்கு தலைமையக இன்ஸ்பெக்டரைச் சந்தித்தார். விடயத்தை விளக்கினார்.

தங்களுக்குப் பொறுப்பான பொலீஸ் அத்தியட்சகர் வைத்தியலங்காரவின் எழுத்துமூல அனுமதிக் கடிதம் கொண்டு வந்தாலேயொழிய படம் எடுக்கவிட முடியாது என்று திரும்பத் திரும்பக் கூறிய தலைமையக இன்ஸ்பெக்டர் உதயன் படப்பிடிப்பாளரை படம் எடுக்க விடாது திருப்பி அனுப்பினார்.

அதனால் பல்கலைக்கழகச் சுற்றாடலில் பொலீஸ் குவிப்பு மற்றும் கெடுபிடி பற்றிய தத்ரூபமான படங்களைத் தரமுடியாது போயிற்று என்பதைத் தெரிவிப்பதோடு, பத்திரிகைச் சுதந்திரத்தை மதிக்காத பொலீஸ அதிகாரிகள் சிலரின் போக்கையும் கண்டிக்கிறோம். (உ)

## ஆனையிறவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும் -

விமானப் படையினர் விடுதலைப் புலிகளின் இலக்குகளை அடையாளம் கண்டு தாக்கி வருவதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

எழுதுமட்டுவாழில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தெற்காக முன்னேறிய படையினர் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் கடும் சமர் மூண்டதை அடுத்து கொழும்பில் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து அடிக்கடி அம்புலன்ஸ்கள் ஓடித் திரிவதாகவும், இரவிரவாக ஹெலிக்கொப்டர்கள் பறப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3-5-6-15-139-173)

## மின்னஞ்சலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழக சமூகம் வெளியிட்டுள்ளது.

'ponku tamil @ hotmail. com' என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்புகொண்டு உரிய தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஒ-6)

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன.

இந்த நிகழ்வில் யாழ்.குடாவிலுள்ள அனைத்து மக்களையும் கலந்துகொள்ளச் செய்யும் வகையில் பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டதுடன் மக்கள் தயார்ப்படுத்தப்பட்டும் இருந்தனர். எனினும் பாதுகாப்புப் படைவட்டாரங்கள் இந் நிகழ்வை நடத்துவதற்கு அனுமதி மறுத்ததுடன், அதில் பொதுமக்கள் பங்குபற்றுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் முழு மும்முரமாக ஈடுபட்டன.

கடந்த இரு நாள்களாக பல்கலைக்கழகச் சுற்றாடலில் பொலீஸாா குவிக்கப்பட்டு பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

எச்சரிக்கை, அச்சுறுத்தல்களினால பொதுமக்கள் இந் நிகழ்வில் கலந்துகொள்ளமுடியாது விட்டாலும் திட்டமிட்டபடி 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை மாணவர்களே நடத்தவதென நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கூடிய பல்கலைக்கழக மாணவர் தீர்மானித்தனர்.

எத்தடைவரினும் திட்டமிட்டபடி இந்த எழுச்சி நிகழ்வை நடத்துவதெனத் தீர்மானித்த அதேசமயம், பொதுமக்களின் உயிர்ப் பாதுகாப்பைக் கருதி, பொதுமக்களை இந் நிகழ்வில் பங்குபற்றாமல் தவிர்க்கும்படி கோருவது என விவேகத்துடன் மாணவர்கள் முடிவு செய்ததை குடாநாட்டில் பல தரப்பினரும் வரவேற்றதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். (உ-3-5-6-173)

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தது. புலிகள் உக்கிரமாகப் பதில் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

சமாதான முயற்சிகளுக்காக ஜனவரி 24 வரை ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கும் புலிகள் தொடர்ந்து தற்காப்பு யுத்தத்தை மட்டுமே மேற்கொண்டு வருகின்றனர்.

உத்தேச இராணுவ நடவடிக்கைகள் போரை மேலும் தீவிரப்படுத்தி தற்போதைய சமாதான முன்முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் என்பதை இலங்கை அரசிற்கு எடுத்துரைக்கும்படி புலிகளின் தலைமை தனது தரப்பின் சார்பில் பேச்சுக்களில் பங்குபற்றும் சிரேஷ்ட பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் மூலம் நோர்வேயின் சமாதானத தூதர் எரிக் சொல்ஹெய்முக்கு தெரிவித்துள்ளது.

தானே விதித்துக் கொண்ட ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தின் கட்டுப்பாடுகள் மற்றும் தரைநிலை சிக்கல்கள் ஆகியவை காரணமாக இராணுவ ரீதியில் பிரதியனுகூலமான அம்சங்களைக் கொண்ட ஒரு பிரதேசத்தைத் தக்கவைத்திருப்பதில் உள்ள பாதகங்களை கணக்கில் எடுத்து, யாழ்.நகருக்கு அண்மித்ததான பிரதேசங்களில் இருந்து தந்திரோபாய பின்வாங்கலை புலிகள் மேற் கொண்டிருந்தனர்.

புலிகளின் தந்திரோபாயப் பின்நகர்வுகளினால் கிடைத்த மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிகள் தந்த துணிவின் காரணமாக, ஆனையிறவை மீளக் கைப்பற்றும் தந்திரோபாய இலக்குடன் தற்போதைய நடவடிக்கைகளை இலங்கை இராணுவம் தொடங்கியிருக்கிறது -இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-6-164)

## சமாதானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைப்பும் தெரிவித்திருந்தும் இது தடுக்கப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரியதோர் விடயம்.

எவரையுமே புண்படுத்தாத வகையில், சாத்வீக வழியில், எமது அடிப்படை அபிலாஷைகளையும் சமாதானத்துக்கான ஏக்கங்களையும் மக்கள் ஒன்று திரண்டு வெளிப்படுத்த எடுத்த இந்த முயற்சியை, " பொது மக்கள் பங்குபற்றுவதை அனுமதிக்கமாட்டோம்" என்று கூறி வட பிராந்திய இராணுவத் தலைமையகம் தடைசெய்துள்ளமை ஓர் அடிப்படை மனித உரிமை மீறலே. இந்த மீறலுக்கு நாம் கண்டனம் தெரிவிக்கின்றோம்.

"கண்ணீர்ப் புகை, குண்டாந்தடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம்"- இவையெல்லாம் தாம் கையாள நேரிடும் என்று பொலீஸார் பத்திரிகை மூலம் மிரட்டியுள்ளதையும் கண்டிக்கின்றோம்.

இத் தடை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பதால், பொதுமக்கள் எவரேனும் இந் நிகழ்வினில் கலந்து கொள்ளச் செலலும் போது வழியில் தடுக்கப்படின், சாத்வீகத்தைக் கைவிடாமல், குறிக்கப்பட்ட நேரத்தை தமக்கு அருகிலுள்ள ஆலயங்களில் செலவிடும்படி அன்புடன் கோரப்படுகின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## ஆலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தில் காலைப் பூசைக்குச் செல்வதற்காக கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த சமயம் கிணற்றடியில் இருந்து 15 யார் தூரத்தில் வீழ்ந்த ஷெல் வெடித்து அதன் சிதறல் அவரது நெஞ்சைத் துளைத்துக் கொண்டு சென்றதால் அவர் அந்த இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் கையில் காயமடைந்த அவரது தாயாரான சாம்பசிவசர்மா பாலாம்பிகை (வயது 60) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியில் வீழ்ந்து வெடித்த மற்றொரு ஷெல்லுக்கு இலக்காகி இராமசாமி இரத்தினசாமி (வயது 36) என்பவர் கையில் காயமடைந்தார்.

அதேசமயம்-

கொடிகாமம், மிருசுவில், உசன், அல்லாரை, கெற்பலி, கிளாலி, விடத்தற்பளை, கோயிலாமனை, ஆசைப்பிள்ளை ஏற்றம் ஆகிய பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து வடமராட்சி நோக்கி சென்ற வண்ணம் இருந்ததாக செய்திகள் தெரிவித்தன. ஷெல் தாக்குதல் காரணமாக கொடிகாமத்தில் கடைகள் மூடப்பட்டிருந்தன. சந்தை கூடவில்லை. அந்தப் பகுதிக்கான பஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

(உ-3-5-6-10-15-31-109-117-173)

## தமது நடவடிக்கைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது 17ஆம் திகதி நிகழ்ச்சி குறித்து அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்குப் பொலீஸாரின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளும்படி மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதன்படி, அனுமதி பெறுவதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தின் நான்கு மாணவ பிரதிநிதிகள், மூன்று ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், 47 மனித நேய அமைப்புகளின் சார்பில் வணக்கத்துக்குரிய பிதா ஒருவர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று யாழ்.பொலீஸ் நிலையத்தில் யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி குணசேகரவைச் சந்தித்தனர்.

பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் மற்றும் வண.பிதா சார்பில் தெரிவிக்கபட்ட கருத்துக்களை செவிமடுத்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் நிகழ்ச்சிக்கு அனுமதி தருவது குறித்து பரிசீலிப்பதற்கு பின்வரும் ஆவணங்களைத் தந்துதவுமாறு குழுவினிடம் வேண்டுகோள் விடுத்தார்.

1. நிகழ்வு நடைபெறவிருக்கும் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தின் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பான துணைவேந்தரிடம் இருந்து அங்கு அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு அனுமதி பெற்ற கடிதத்தின் பிரதி.

2. நிகழ்ச்சியில் பொதுக்கூட்டமும் இடம்பெறுவதால் அதற்கான ஒலிபெருக்கி அனுமதி தருவதற்கு பின்வரும் விவரங்கள்:-

*அ) ஒலிபெருக்கி உரிமையாளர் மற்றும் ஒலிபெருக்கி விவரம்.*

*ஆ) பொதுக்கூட்டத்தில் பேச இருப்போரின் பெயர் விவரம்.*

*இ) பேசுவோர் உரையாற்ற இருக்கும் விடயங்கள் பற்றிய சுருக்கம்.*

அத்தோடு -

யாழ்.பல்கலைக்கழகத்தின் மைதானத்தை விளையாட்டுப் போட்டி போன்ற பொது நிகழ்ச்சிக்கு பயன்படுத்துவதற்கு துணைவேந்தர் அனுமதிக்க முடியும். பொதுக்கூட்டம் நடத்துவதற்குப் பயன்படுத்துவதற்கு அவரால் எழுத்து மூலம் அனுமதி தர முடியுமோ என்பது கேள்விக்குரியதே என்றும் பொலீஸ் அத்தியட்சகர் குழுவினருக்கு சுட்டிக்காட்டினார்.

பொலீஸ் அத்தியட்சகர் குறிப்பிடும் ஆவணங்களை சிலமணி நேரத்தில் சமர்ப்பிப்பதாகக் கூறிச் சென்ற குழுவினர் இற்றைவரை பொலீஸாரை மீளத் தொடர்பு கொள்ளவே இல்லை.

எனவே அனுமதி பெறப்படாத இந்தக் கூட்டம் குறித்து பிரசாரம் செய்வதற்குக் கூட சட்ட ரீதியாக அனுமதி வழங்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் 17ஆம் திகதி நிகழ்வு குறித்து பிரசாரம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றைப பொலீஸார் கைப்பற்றினர். எனினும் அவற்றை வைத்திருந்த மாணவர்களைப் பொலீஸார் விடுவித்தனர்.

முன் அனுமதி பெறப்படாத பொதுக்கூட்டத்திற்கு பொதுமக்கள் செல்வதைத் தடுப்பது பொலீஸாரின் சட்டரீதியான கடமையாகின்றது. அந்தக் கடமையையே பொலீஸார் செய்கின்றனர்.

எனினும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் செல்வதைப் பொலீஸார் தடுக்கவில்லை; தடுக்கவும் மாட்டார்கள்.

- இப்படி அந்த அதிகாரி விளக்கமளித்தார். (உ)

வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி
மீண்டும் ஆரம்பம்:-
யூனியன்
சேவிஸ் ஸ்ரேசன்
இருபாலைச் சந்தி. (83014)

நடைபெறுகிறது!!
A/L
"கிரயக் கணக்கீடு"
கணக்கீடு
D.SAM
செவ்.,வியா.- காலை 6.15
STC
K.K.S. வீதி, சுன்னாகம் (83019)

விக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS 8.30-2.00
✲ பிரிவு 1ற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
✲ பிரிவு 2 வெகுவிரைவில்
தரம் 6 தொடக்கம் O/L வரை புதிய பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (82943)

நாளை ஆரம்பம்!
A/L 2001
கம்பனி
மாலை - 4 மணி
D.SAM
சித்தி விநாயகர்
மல்லாகம் (C/14840)

நாளை ஆரம்பம்!
A/L 2003
மாலை 5 மணி
கணக்கீடு
D.SAM
சித்தி விநாயகர்
மல்லாகம் (C/14839)

ஒரிஜினல் வீடியோ CD வெளியீடு
அஜித் நடித்த
தீனா
விஜயகாந்த், ரம்பா நடித்த
வாஞ்சிநாதன்
புதிய திரைப்படங்கள் விற்பனைக்கு உண்டு
✲ பழைய, புதிய போஸ்ர்கள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
விஷ்ணு வீடியோ
K.K.S.றோட், கோண்டாவில் (83042)

லீலா 2001
✪ லீலா தினக் கலண்டர்கள்
✪ லீலா மாதக் கலண்டர்கள்
✪ லீலா டயறிகள்
கொழும்பு விலைக்கே விற்பனையாகின்றன.
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/14808)

விற்பனைக்கு
Pentium III 800 MHZ Computer
UPS 650 VA
SCANNER
NODEM
உடன் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
No.52/1, Stanley Road,
Jaffna. (C/14852)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.